பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 17 செவ்வாய்க்கிழமை 01.03.2022 கதிர் 116

**இனிது ரகசியம் அல்ல!**

வயது போகப் போக மானம், ரோஷம், சூடு, சொரணை எல்லாம் குறையும் என்பார்கள்.

கூட்டடைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் அது பொருந்தும் போல. நடக்கும் விடயங்களைப் பார்த்தால் எனக்கு அப்படித்தான் தோன்றுகின்றது. ☞2

## உக்ரைனின் இராணுவப் பலத்தை முழுமையாக அழிப்பதே எம் முடிவு

### ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவிப்பு



உக்ரைனின் இராணுவப் பலத்தை முழுமையாக அழிப்பதே போரை முடிவுக்குக் கொண்டு வரும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷியா வான் வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனைத் தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. ☞13

# ரஷ்யப் படைகள் உடன் வெளியேற வேண்டும்!

## நேரடிப் பேச்சில் உக்ரைன் வலியுறுத்து



ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று உக்ரைன் வலியுறுத்தியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா முன்னெடுத்துவரும் தாக்குதல்களை நிறுத்துவது தொடர்பில் ரஷ்ய – உக்ரைன் பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று முக்கிய பேச்சு நடைபெற்றது.

இந்தப் பேச்சு பெலாரஸ் நாட்டின் எல்லையில் உள்ள கோமல் நகரில் இடம்பெற்றது. ☞13

# தமிழரசு தவிர்ந்த 5 தமிழ்க் கட்சிகள் ஐ.நாவின் ஆணையருக்குக் கடிதம்

## சர்வஜன வாக்கெடுப்புக்கும் வலியுறுத்து



**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த 5 தமிழ்க் கட்சிகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாருக்குக் கூட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளன.** ☞10

## ஜேர்மனி கலாசார நிறுவனப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் மாநகர மேயருடன் சந்திப்பு

(இ.கலையமுதன்)




இலங்கைக்கான ஜேர்மனியின் கலாசார நிறுவனப் பணிப்பாளர் ஸ்டீபன் விங்லர், யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று மதியம் 2.30 மணியளவில் யாழ். மாநகர சபையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் மொழியைப் பயிற்றுவிப்பது தொடர்பாகவும், ஜேர்மன் கலாசார ☞10

## ஆணையரின் அறிக்கையை வரவேற்கின்றது கூட்டமைப்பு

### விரைவில் பதில் அறிக்கை என்கிறார் சம்பந்தன்



இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நாம் அறிக்கையூடாக ☞10

## நீதிக்காகப் போராடும் பேராயர் பாப்பரசருடன் நேரில் சந்திப்பு

### வத்திக்கானில் நேற்று முக்கிய பேச்சு



இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் போராடும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, திருத்தந்தை பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸை நேரில் சந்தித்துப் பேசினார். ☞10

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடிதம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் உறுப்பு நாடுகளின் தலைமைப் பிரதிநிதிகளுக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசியமக்கள் முன்னணி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை தொடர்பான விசாரணைகளை இனியும் தாமதப்படுத்தாமல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் ஒப்படைப்பதற்காக ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தமிழ்த் ☞13




## தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு;

# ஓய்வுபெற்ற வைத்தியர் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

பொரளையிலுள்ள அனைத்துப் புனிதர்கள் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பில்கைதான ஓய்வுபெற்ற வைத்தியர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்களின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்களின் விளக்கமறியல் உத்தரவு எதிர்வரும் 14ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் ☞13

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'இல்லாத மேடையில் எழுதாத நாடகத்தில்' சம்பந்தன் ஐயா இந்த வயோதிப காலத்தில் தனி ஆவர்த்தனம் வாசித்துக் கொண்டிருக்கின்றார் போலும்.

தனக்குத்தானே 'ராசா' பட்டம் சூட்டி, தன்னைத் தானே பீற்றிக் கொண்டிருக்கின்றாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்தப் பீடிகைகள் என் வாசகர்களுக்கு சில சமயங்களில் குழப்பத்தை – விளக்கமின்மையை – தரலாம். ஆகவே சற்று விளக்கமாகக் கூறுகிறேன்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இலங்கை நிலைவரம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அவதானிப்பு அறிக்கையின் மீது நாளை மறுதினம் விவாதம் நடக்க இருக்கின்றது. அங்கத்துவ நாடுகள் அந்த அறிக்கை தொடர்பில் தங்களது கருத்துக்களை சுருக்கமாக – அதே நேரம் பகிரங்கமாக – அன்று தெரிவிக்கும்.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள இந்த அறிக்கை ஆணையாளரினால் தயாரிக்கப்பட்ட போது அதற்குப் பின்னூட்டம் அளிக்கும் விதத்தில் கடந்த ஜனவரி இறுதியில் ஒரு கடிதத்தை ஆணையாளர் மிச்செலி பச்சலெட் அம்மையாருக்கு சம்பந்தன் ஐயா அனுப்பிருந்தார். தனிப்பட்ட சம்பந்தனாகவோ, ஓர் எம்.பியாகவோ அவர் அக்கடிதத்தை அனுப்பிவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலா, புளொட் ஆகிய பங்காளிக் கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இக்கடிதத்தை தாம் அனுப்புகின்றார் என்று தெட்டத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் அதில் குறிப்பிட்டே அதனை அனுப்பினார் சம்பந்தன்.

ஆனால் அதே கூட்டமைப்பில் இருப்பதாகக் கூறப்படும் ரெலோவும், புளொட்டும், விக்னேஸ்வரனின் கட்சி, சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் சிறிகாந்தா – சிவாஜிலிங்கம் இணையின் கட்சி ஆகியவற்றுடன் வேறு விதமான – புதிய – கடிதம் ஒன்றைத் தனியாக மனித உரிமைகள் ஆணையாளருக்கு – ஜெனிவாவுக்கு அனுப்பியுள்ளது.

ஒரே விடயத்துக்கு, கூட்டமைப்புத் தலைவர் என்று – தமிழரசு, ரெலோ, புளொட் கூட்டுக்குத் தலைவர் என்று – சம்பந்தன் கடிதம் எழுத, அவரையும் அவரது தமிழரசுக் கட்சியையயும் ஒதுக்கி விட்டு, அதே விடயத்துக்கு பிறிதொரு கடிதத்தை வேறு கட்சிகளுடன் சேர்ந்து தனியாக பங்காளிக் கட்சிகளான புளொட்டும் ரெலோவும் அனுப்பும் என்றால், சம்பந்தன் தலைமையில் ரெலோ, புளொட்டை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஓர் அமைப்பு இருக்கின்றதா என்று கேள்வி எழுவது நியாயம்தானே...?

ஜெனிவா விடயத்தில் கூட்டமைப்பையும் அதன் தலைவர் சம்பந்தனையும் உதாசீனப்படுத்தி ஒதுக்கி விட்டு தனிவழிப் பயணத்தை – அல்லது வேறு அணியுடன் சேர்ந்து புதுப்பாதையில் பயணத்தை – புளொட்டும், ரொலோவும் ஆரம்பித்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது.

ஆனால் சம்பந்தன்தான் இன்னும் கூட்டமைப்பு என்று ஒன்று இருப்பதாகக் கருத்திக் கொண்டு, அதன் தலைவராகத் தாம் இருக்கின்றார் எனக் கனவு கண்டு கொண்டு, கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றார்.

அதனால்தான் இல்லாத மேடையில் எழுதாத நாடகத்தில் அவர் நடிக்கின்றார் – தனி ஆவர்த்தனம் வாசிக்கின்றார் – என்றேன்.

கடந்த ஜனவரி 11ஆம் திகதி, கொழும்பில் சம்பந்தன் ஐயா வீட்டில் தமிழ்த் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் – சம்பந்தன், மாவை, சித்தர், செல்வம், சுமந்திரன் – கூடியிருந்தனர். அது, இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகளின் பொது நிலைப்பாட்டுக் கடிதம் எழுதுவது பற்றிய விடயத்தை ஆராய்வதற்கான கூட்டம்.

அந்தக் கலந்தாலோசனையின் இடையே ஒரு விடயத்தை சம்பந்தனும் சுமந்திரனும் சுட்டிக் காட்டினர்.

ஜெனிவாக் கூட்டம் ஆரம்பமாகப் போகின்றது. அதற்குக் கூட்டமைப்பின் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை விளக்கிக் கடிதம் எழுத வேண்டும், முந்திய வருடம் தனித் தனிக் குழுக்களாக கடிதம் எழுதி ஏற்பட்ட குழப்பம் இம்முறை வேண்டாம், கூட்டமைப்பு என்னென்ன விடயங்களை இம்முறை ஜெனிவாவுக்குக் சுட்டிக்காட்ட வேண்டும் என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை சம்பந்தன் ஐயா, சுமந்திரனுக்கு விளக்கியுள்ளார். அவற்றின் அடிப்படையில் கடித நகலை சுமந்திரன் தயாரிப்பார். அவற்றை அவர் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்குச் சமர்ப்பிப்பார். பங்காளிக் கட்சித் தலைவர்கள் அந்த நகலில் மாற்றங்கள், திருத்தங்கள் வேண்டும் எனக் கருதினால் அவற்றைச் சுட்டிக்காட்டட்டும். திருத்தங்கள் செய்து, கடிதத்தை மாற்றி இறுதியாக்குவோம். அதன் முடிவில் ஒன்றுபட்ட கூட்டமைப்பின் தலைவராக அக்கடிதத்தில் சம்பந்தன் ஒப்பமிட்டு அனுப்புவார்.

☞10

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 31st March, 2022 from suitably qualified persons for the following posts.

**1. INSTRUMENT CARETAKER CUM REPAIRER, GRADE III**
**(Musical Instruments or Dancing Instruments)**

**Qualifications:**
i. Should have sat for the G.C.E (A/L) Examination
ii. Should have at least two (02) years' experience and ability in repairing and fixing Musical Instruments or Dancing Instruments or Arts & Sculpture Instruments in a Higher Educational Institute or reputed institute.
iii. Experience in maintenance of issue registers and storage of instruments.

- Should be a citizen of Sri Lanka
- Should be of good character sound physical health.

**Salary Scale** : U-MN1 (IIIA)- Rs.30,725-17x300-35,825 p.m
**Selection** : By Practical test and interview
**Age** : Not more than 45 years

**2. NURSING OFFICER (GRADE II)**

**Qualifications:**
(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sittings with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale :** U-MT 1(IIIA)- Rs.31, 625-7x300; 10x355-37,275 p.m.
**Selection :** By Interview
**Age limit :** Not more than 40 years.

***Note: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***


**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Universities Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Applications should be on specified form issued by the University. Application Form, University specified pay-in-voucher and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna Collection Account Number: 9700 0009 0000 387.** A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

**Sample Deposit Slip is given below:**




**Copies of certificates in support of the Educational/Professional qualifications and experience as at the closing date of the applications must be attached to the applications.**

The envelope containing the duly filled application form must bear Title of the Post should be indicated on its top left hand corner and either hand delivered or sent under registered post to **reach the Office of the Deputy Registrar/ Non-Academic Establishments, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna on or before 31.03.2022.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.
Incomplete and illegible applications and applications that are received after the closing date and without the copies of certificates will be rejected without intimation.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA.**
**28.02.2022**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் கேவலம் இது!

**பதினான்கு கட்சிகள் கொண்ட ஆளும் கட்சிக் கூட்டமைப்பில் தங்களில் பதினொரு கட்சிகளின் நிலைமை யாது என்பதை மூத்த இடதுசாரி அரசியல்வாதியும், முன்னாள் அமைச்சரும், லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண விசனத்துடன் வெளிப்படுத்தியிருக்கின்றார்.**

**கறியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட கறிவேப்பிலையாகக் கூடத் தங்களை கணக்கெடுக்க அரசு தயாரில்லை என்பதை வெட்கம், ரோஷமின்றி வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் அவர் இருக்கின்றார்.**

**யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட சமயம் இந்த விசனத்தை மனம் திறந்து கொட்ட வேண்டிய நிலைமை அவருக்கு.**

**“அரசாங்கத்துக்கும் எங்களுக்குள்ளும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்பது உண்மை. மக்கள் இதனால் கொதிப்படைந்து இருக்கின்றனர். நாங்கள் பதினொரு கட்சிகள் ஒன்றாக இணைந்து இருக்கின்றோம். அனைவரும் ஒவ்வொரு வாரமும் கூடி கருத்துக்களைப் பரிமாற்றிக் கொண்டு இருக்கின்றோம்.**

**“அந்த யோசனைகளைக் கோவையாக தயாரித்து அரசாங்கத்துக்கு வழங்க இருக்கின்றோம். அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, பகிரங்கமாகக் கூட்டம் கூட்டி மக்களுக்கும் தெரியப்படுத்தவுள்ளோம்.**

**“விலைவாசி உயர்வு என்பது உலக நாடுகள் எல்லாவற்றிலும் இருக்கும் பிரச்சினைதான். ஆனால் அரசாங்கம் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**“பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் நிறுத்திவிட்டு அதற்கான நிதியை மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொடுப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். ஆகவே மக்கள் படும் கஷ்டங்களை உணர்ந்து அரசாங்கம் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்”**

**– இப்படி யாழ்ப்பாணத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார் அவர்.**

**ஆளும், கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் தலைவர்களில் மிக மூத்த அரசியல்வாதி அவர். இப்போது 88 வயது. புகழ்பெற பழம்பெரும் இடதுசாரி அரசியல்வாதியான என்.எம். பெரேராவின் சகோதரியின் மகன். அது மட்டுமல்ல, மருத்துவத்துறையில் – குறிப்பாக நுண்ணுயிரியல் துறையில் – அதுவும் வைரஸ்கள் பற்றிய மருத்துவ விஞ்ஞான நெறியில் – லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.**

**கொவிட் தொற்றுப் பரவிய காலகட்டத்தில் அவ்விடயத்தில் துறை தோய்ந்த – நிபுணத்துவம் மிக்க – மூத்த அரசியல்வாதியாக அவர் இருந்தார். ஆனால் கோட்டாபய அரசு, தன் அரசுக் கூட்டமைப்பில் அத்துறையில் நிபுணத்துவம் மிக்க மூத்த அரசியல்வாதியான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் கருத்தை ஒரு பெயருக்குத் தன்னும் செவிமடுக்கத் தயாராக இருக்கவில்லை. அவரைக் கண்டுகொள்ளவேயில்லை.**

**தன்னுடைய அறிவைத் தானாக நாட்டுக்கு வழங்க அவர் முன்வந்த போது கூட ஆட்சித் தலைமை அதனை உதாசீனம் செய்து, உதறித் தள்ளிப் புறக்கணித்து நடந்து கொண்டது என்று அப்போதே தகவல் வெளியாகியது.**

**இத்தகைய ஆட்சித் தரப்போடு பதினொரு கட்சிகள் பதவி சுகத்துக்காக இணைந்து கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பது கேவலத்திலும் கேவலம்.**

**இதற்கிடையில் –**

**தமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் அனுமதியுடன் எந்தச் சமயத்திலும் தமது கட்சி அரசில் இருந்து வெளியேறத் தயார் என அக்கட்சியின் செயலாளர் நாயகமும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரா கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போது கூறியிருக்கின்றார்.**

**இவ்வளவு மோசமாக நடத்தப்பட்ட பின்னரும் இந்தக் கட்சிகள் இதோ வெளியேறுகிறோம், அதோ வெளியேறுகிறோம் என்று கூறியபடி அரசைக் கட்டிப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதுதான் அரசியல் கேவலம்.**

## நான் குற்றமிழைக்கவில்லை என்பதை நிரூபிக்க தேவாலய சிலுவை மீது சத்தியம் செய்யத் தயார்!

### இப்படிக் கூறுகின்றார் மைத்திரி



எந்தவொரு தேவாலயத்தின் சிலுவையின் மீதும் சத்தியம் செய்து தாம் குற்றமிழைக்கவில்லை என்பதை நிரூபிக்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தாம் சிங்கப்பூரில் குயின் எலிசபத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய எந்தவொரு தகவல்களும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எந்தவொரு தேவாலய சிலுவையின் மீதும் சத்தியம் செய்யத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலன்னறுவையில் தேவாலயமொன்றின் ஆராதனைகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

இந்த புனித தேவாலயத்தில் இருந்து கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய முக்கிய விடயமொன்றைக் கூற விரும்புகின்றேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி அறிந்து கொண்டே நாள் வெளிநாடு சென்றேன் என சிலர் பிரசாரம் செய்கின்றார்கள்.

இது முற்று முழுதாகவே பொய்யானது. இது பற்றி புலனாய்வுப் பிரிவினரோ அல்லது வேறு தரப்பினரோ தகவல் வழங்கியிருந்தால் நான் எனது பயணத்தை நிறுத்தியிருப்பேன்.

நான் மருத்துவ சிகிச்சைகளுக்காகச் சென்றிருந்தேன். சில ஊடகங்களில் தாக்குதல் பற்றி வைத்தியசாலைக்குத் தொலைபேசி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது என செய்தி வெளியிடுகின்றன.

எனினும் சிங்கப்பூர் வைத்தியசாலைகளில் நோயாளிகளிடம் தொலைபேசிகளைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை.

பௌத்தர் என்ற ரீதியில் புத்தரின் பாதங்களைத் தொழுது இந்த சம்பவம் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை என்பதை உறுதிபடக்கூற முடியும். தகவல்கள் கிடைத்திருந்தால் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்திருக்க மாட்டேன்.

சஹ்ரானைக் கைது செய்யுமாறு நான் ஜனவரி மாதமே பணிப்புரை விடுத்திருந்தேன். நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய எந்தவொரு விடயத்துக்கும் நான் உடந்தையாக இருக்கப் போபவனல்லன் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## முழுமையாக ஸ்தம்பிக்கும் நிலையில் ரயில் சேவைகள்

ரயில்வேத் திணைக்களத்திடம், அடுத்து வரும் ஐந்து நாள்களுக்கு மட்டுமே எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரயில்வேத் திணைக்களத்தால் 10 நாள்களுக்கு எரிபொருளை சேமித்து வைக்க முடியும் என்ற போதிலும், தற்போது சுமார் 50 வீதத்தால் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தின் எரிபொருள் கையிருப்பு குறைந்துள்ள போதிலும், ரயில் சேவைக்கு அது தடையாக இருக்காதெனத் தான் நினைக்கிறேன் எனகுறிப்பிட்டுள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் ஒரு லட்சம் லீற்றர் எரிபொருள் பயன்பாட்டில் ரயில்கள் இயங்குகின்றன எனவும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளாந்த அடிப்படையில் எரிபொருளைக் கொள்வனவு செய்யும் முறையைச் செயற்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் நாட்டில் ஏழு நாள்களுக்குப் போதுமான டீசல் கையிருப்பு மட்டுமே இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. ஆறு நாள்களில் டீசல் கப்பல் ஒன்று நாடு திரும்பும் என சுட்டிக்காட்டிய கூட்டுத்தாபனம், கப்பல் தரையிறங்குவதற்குக் குறைந்தது இரண்டு நாள்கள் ஆகும் எனவும் தெரிவித்துள்ளது.

## உக்ரைன் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை மக்களால் பெருமுதவி!





இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்துள்ள உக்ரைனிய பிரஜைகள் பெரும் நெருக்கடி நிலைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அவர்களின் திட்டமிட்ட கால எல்லையை நிறைவு செய்துள்ள போதிலும், அங்கு நடக்கும் யுத்தம் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு இன்று ஆறாவது நாளாகவும் தொடர்கிறது. இந்நிலையில் பல நாடுகளில் உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் நாடு திரும்ப முடியாத நிலையில் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கைக்கு வந்துள்ள பெருமளவு உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் பணம் இல்லாமல் தமது ஹோட்டல் அறைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பலர் இலங்கையர்களின் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். அவ்வாறு வெளியேறியவர்களுக்குத் தேவையான உணவுகளை மக்கள் வழங்கி வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.

இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு இது தொடர்பில் போதிய கவனம் செலுத்தவில்லை என உனவட்டுன பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இக்கட்டான நிலையில் இலங்கை மக்களின் அன்புக்கு நன்றி தெரிவிக்கிறோம் உக்ரைனிய பிரஜைகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நாள்களாக எங்களுக்குத் தூக்கம் வரவில்லை. எங்கள் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. நாங்கள் உதவி கேட்டோம். ஆனால் அது வெற்றிபெறவில்லை. எங்களால் எந்தத் தகவலையும் பெற முடியவில்லை, நாங்கள் நம்பிக்கையற்ற ஒரு சூழ்நிலையில் இருக்கிறோம் என உக்ரேன் சுற்றுலாப் பயணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போரும் வன்முறையும் நல்லதல்ல. நான் உக்ரைனியனாக இருந்தாலும் என் மனைவி ரஷ்ய நாட்டவராவார். போர் தொடர்ந்தால் அதன் விளைவுகளை இருவரும் அனுபவிக்க வேண்டி வரும். எனவே போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# “நமக்கான வாய்ப்புகளை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.”

**MTM Beauty Parlour அழுகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் மாதவன் துஷ்யந்தினி உடனான நேர்காணலிது.**

### உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் மாதவன் துஷ்யந்தினி. யாழ்ப்பாணத்தில் இனுவில் கிராமத்தில் வசித்து வருகின்றேன். சிறுவயதிலிருந்தே அழகுக்கலைத்துறையில் எனக்கு அதீத ஆர்வம் இருந்தது. அழகுக் கலைத்துறையையே நான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நினைத்து அது தொடர்பான கற்கைநெறியை கற்க ஆரம்பித்தேன். இதன் மூலம் அழகுக் கலைத்துறையிலுள்ள பல விடயங்களையும் நான் கற்றுக்கொண்டேன். 2010 ஆம் ஆண்டு இதனை ஒரு தொழிலாக செய்ய ஆரம்பித்தேன். முதலில் சிறு சிறு வேலைகளை பொறுப்பேற்று செய்யத் தொடங்கிபின் 2015 ஆம் ஆண்டில் MTM Beauty Parlour எனும் அழகுக்கலை நிலையத்தை ஆரம்பித்து தற்போது வரை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றேன்.

### அழுகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

கலைகள் என்பது நாம் உருவாக்குவது என்பதை தாண்டி நம்மை உருவாக்குபவை என்று தான் சொல்லவேண்டும். அது அழகுக்கலையாகவோ அல்லது வேறு கலையாகவோ இருக்கலாம். எந்தவொரு கலையையும் நாம் ரசித்து செய்யும் போது நம்மை அறியாமலேயே நாம் உயர்ந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். அப்படியென்னை உயர்த்தியது இந்த அழகுக்கலையென்று கூறலாம். எப்படியாவது அழகுக்கலைத் துறையை கற்க வேண்டுமென்பது எனது நீண்ட நாள் ஆசை. சிறுவயதிலிருந்தே அழகுக்கலைத்துறையை அறிந்து அதனை மற்றவர்களுக்கு செய்து பார்க்க வேண்டுமென பதில் தான் எனக்கு ஆர்வம். நாளடைவில் அழகுக்கலைத்துறையிலுள்ள ஆழமான விடயங் களையெல்லாம் கற்றுக்கொண்டு அதனை எனது வேலையில் வெளிப்படுத்தும்போதெல்லாம் எனக்குள் இருக்கும் ஆர்வம் மேலும் மேலும் அதிகரிக்கின்றது என்றே கூறவேண்டும்.

### இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

எந்த துறையாக இருந்தாலும் சவால்கள், போட்டிகள் என்பது இருக்கத்தான் செய்கிறது. அவற்றை எல்லாம் துணிவோடு எதிர்கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகரவேண்டும். போட்டி நிறைந்த இந்த அழகுக்கலைத்துறையை நாம் நமது சுயதொழிலாக கையிலெடுத்திருப்பது ஒரு சவால்தான். காரணம் தற்போது அழகுக் கலையென்பது அனைவரும் அங்கீகரிக் கின்றதொரு தொழிலாக மாறிவருகிறது. அதிக வருமானம் ஈட்டக் கூடிய தொன்றாகவும் பெண்களுக்கு இயல்பானதொரு தொழிலாகவும் இந்த அழகுக் கலைத் துறையிருப்பாதல் ஏதாவதொரு இடத்தில் புதுமுக அழகுக்கலை நிபுணர்கள் உருவாகிக் கொண்டுதான் இருக்கின்றனர். ஆகவே இவர்களோடு நாம் போட்டிப்போட வேண்டி இருக்கிறது. இந்த துறையில் நாம் இருக்கும்போது மற்றவர்களை விடவும் தனித்துவமாக தெரிய நாம் பல புது புது விடயங்களை அறிமுகப்படுத்தி நம்முடைய திறனை வெளிக்காட்டவேண்டும்.

### அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

நமக்கனாதொரு அங்கீகாரம் கிடைக்க வேண்டுமெனில் நாம் எதையாவது சாதிக்கவேண்டும். அவ்வாறு சாதிக்கவேண்டுமெனில் நமக்கு வாய்ப்புகள் கிடைக்கவேண்டும். ஆனால் நமக்கான வாய்ப்புகளை நாம் தான் உருவாக்கிக்கொள்ள வேண்டும். எனவே தான் எனக்கான வாய்ப்புகளை நானே உருவாக்கிக்கொள்கின்றேன். எனது வாடிக்கையாளர்களின் திருப்தியும் எனது பூரண சேவையும் தான் பல வாய்ப்புகளை எனக்கு தேடித்தருகிறது. எனக்கு கிடைக்கும் இந்த வாய்ப்புகள் என்னை அடுத்த படிக்கு நகர்த்திச்செல்கிறது என்றே கூறவேண்டும்.

இந்த துறையில் நானடைந்த சாதனைகள் என்று பார்க்கும்போது மிகப்பெரிய சாதனையாகத் தோன்றுவது எனது இந்த அழகுக்கலைத்துறைப் பயணம் தான். ஆம். நிச்சயமாக 12 வருடங்களாக இந்த அழகுக்கலைத்துறையில் ஏராளமான வாடிக்கையாளர்கள், அதிக வருமானம், சுய தொழில் என பயணித்து கொண்டிருக்கிறேன் என்பதே எனக்கொரு வெற்றிதான். இன்னும் தொடர்ந்தும் என் பயணத்தில் பல சாதனைகளை



மாதவன் துஷ்யந்தினி
உரிமையாளர்
MTM Beauty Parlour அழுகுக்கலை நிறுவனம்

பதிவு செய்யவேண்டும் என்பது எனது குறிக்கோள்.

### சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நான் கூற நினைப்பது வீட்டில் வீணாக பொழுதை போக்காமல், வீணாக நேரத்தை கழிக்காமல் சொந்தமாக ஒரு சுயதொழிலை மேற்கொள்ளவேண்டும் என்பதுதான். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் மற்றவர்களுக்கு அடிபணிந்து வாழாமல் நம்மால் இயன்றதொரு தொழிலை செய்து முன்னேற வேண்டும். இனி வரும் தலைமுறையினருக்கும் இந்த அழகுக்கலைத்துறையில் ஈடுபடவேண்டுமென்ற ஆர்வம் இருக்கும். அப்படி ஆர்வம் கொண்ட பெண்கள் இதனை ஒரு கற்கைநெறியாக தேர்ந்தெடுத்து பின் அதைவைத்து சிறியளவில் ஒரு சுய தொழிலாகவோ அல்லது பகுதிநேர தொழிலாகவோ ஆரம்பித்து வருமானம் ஈட்டலாம்.



# ஆன்மீகத்துடன் அறிவியலை இணைக்கும் மஹாசிவராத்திரி!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்று நம்பிக்கை ஊட்டினார் ஞானசம்பந்தப் பெருமான். அவரால் அப்பரே என்று அழைக்கப்பட்டவர், 'நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா' என்று அழைத்து 'கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் – நற்றுணையாவது நமச்சிவாயவே' என்று உபதேசம் செய் தார். அவர்களின் பின்னர் வந்தவர் 'மீளா அடிமை உமக்கே ஆளாய்' என்று இறைவனிடம் இயம்பி நிற்கின்றார். 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி – உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் செல்வமாகிய சிவனை 'நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க, இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்று பணிந்து நின்று அதன் வழியில் எம்மையும் ஆற்றுப்படுத்துவராக மணிவாசகப் பெருமான் வந்து நிற்கிறார். இவர்கள் யாவருமே இறை நினைப்பை மனமிருத்தி வாழ்நாளெல்லாம் வாழ்ந்தவர்கள். இவர்கள் சமயநெறியின் வழியில் கால்பதித்து நின்றவர்கள் எனலாம். இவர்களை முன்னிறுத்தியே 'நால்வர் வழியில் நடப்பது நன்று' என்றும், 'நாலு பேர் சொல்லுவதைக் கேள்' என்றும் மரபாக வந்திருக்குமோ என்பதும் கருத்திருத்த வேண்டியதே.

இவர்களின் சிந்தனை, செயற்பாடு, வாழ்வியல் முறைகள் அத்தனையுமே கோவிலாகவே இருந்திருக்கிறது என்பதுதான் முக்கியமாகும். கோவிலை மையமாகக் கொண்ட இவர்களின் செயற்பாடுகளாற்கிடைத்த அனுபவங்கள் எங்கள் சமய நெறியில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. முழுமுதற் கடவுளாய் எம்பிரான் சிவனையே இவர்கள் யாவரும் பணிந்து போற்றி, தங்களின் மனத்தைப் பக்தியால் பிணைத்து , உருக்கமாய் பல தெய்வத் திருமுறைகளாக ஆக்கி எமக்கெல்லாம் அளித்திருக்கிறார்கள்.

அவர்களின் அகத்தில் அமர்ந்திட்ட அந்த ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியான சிவனைக் குறித்து பல விரதங்கள் அனுட்டிக்கப்பட்டு வருகின்றமையை யாவரும் அறிவோம். அப்படி அமையும் அந்த அருட் சோதியான சிவனின் விரதங்களுள் மிகவும் போற்றுதலுக்கு உரியதாகவும், ஆன்மீக. அறிவியல் கருத்துகள் நிறைந்ததாகவும் அமைகின்ற விரதம்தான் வருடந் தோறும் வருகின்ற 'மஹா சிவராத்திரி' விரதமாகும்.

மகிமை வாய்ந்த சிவராத்திரி என்பது ஐந்து வகையினதாக இருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும். திங்கட்கிழமையோடு இணைந்து வருவது யோக சிவராத்திரி. வருடத்தின் பனிரெண்டு மாதங்களில் வருகின்ற தேய்பிறை, வளர்பிறைகளில் வரும் சதிர்த்தசி திதியில் வருகின்ற இருபத்து நான்கு நாள்களையும் 'யோக சிவராத்திரி' என்னும் பெயரால் அழைக்கின்றனர். தை மாதம் தேய்பிறை பிரதமை தொடங்கி பதிமூன்று நாள்கள் தினமும் ஒரு வேளை மட்டும் உணவு உண்டு, பதினான்காம் நாள் வருகின்ற சதிர்த்தசி திதியன்று முறையாக விரதம் இருப்பதுதான் 'பட்ச சிவராத்திரி' என்று அழைக்கப்படுகிறது. சிவராத்திரி என்பது பெரும்பாலும் அமாவாசை அல்லது சதிர்த்தசி திதியை அண்டியே வரும். ஆனால் 'மாத சிவராத்திரி' மாதத்தின் மற்றைய திதிகளிலும் வருகிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

இப்படிச் சிவராத்திரிகள் இடம் பெற்றாலும் மாசி மாதத்து தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் வருகின்ற சிவராத் திரியே 'மஹா சிவராத்திரி' என்று ஏற்றிப் போற்றி அனுட்டிக்கப்படுகிறது. ஐந்து சிவராத்திரிகள் என்னும் நிலையில் அவற்றுள் ஒன்றான சிவராத்திரிக்கு மட்டும் 'மஹா' என்று அடைமொழி கொடுத்து அதனை உயர்வாக எண்ணுவது ஏன் என்னும் எண்ணம் எம்முள் எழுகிறதல்லவா? அப்படி அந்த நாளில் சிவராத்திரி அமைவதற்கு ஆன்மீகம் முக்கியமா அல்லது அதனுடன் அறிவியல் முக்கியத்துவப்படுத்தப்படுகிறதா என்னும் சிந்தனைகள் எழுகின்றன அல்லவா!

எங்களின் சமயம் வாழ்வியல் நெறிகளை முழுவதுமாய் உள்ளடக்கிய சமயமாகும். உணவு சம்பத்தப்படு கிறது. உடை சம்பத்தப்படுகிறது. உடற் சுத்தம் சம்பத்தப்படுகிறது. பரம்பொருளைப் பாடிப்பரவுதற்கு நல்லு டலும், நல்லாரோக்கியமும் அடிப்படையாகும். உடலின் ஆரோக்கியத்துக்கு உணவு என்றுமே இன்றியமை யாததாகும். இவை அனைத்தையும் தாங்கி நிற்பதாகவே எங்கள் சமயம் 'விரதம்' என்னும் நிலையை ஏற்படுத்தி இருக்கிறது எனலாம். அது கூடத் திட்டமிடப்பட்டே இருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும். விரதம் என்று சொல்லும் வேளை அங்கே கோள்கள் சம்பந்தப்படுகின்றன. திதிகள் சம்பந்தப்படுகின்றன. கோள்களால் நாள்கள் அமைகின்றன. நாள்களும், திதிகளும் ஆன்மீக மார்க்கத்தில் தத்துவத்தை, அறிவியலைக் குறித்திடும் நுட்பமான சொற்கள் என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமேயாகும். இதன் அடிப்படையில்த்தான் நாம் 'மஹாசிவராத்திரியை' பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

சமயத்தின் நுட்பமான கருத்துக்களை யாவரும் விளங்க வேண்டும் என்பதற்காகவேதான் கதைகள் வந்தன. கதைகளின் இன்னுமொரு நிலைதான் புராணங்கள் என்றுகூட எடுத்துக்கொள்ளலாம். அந்த வகையில் சிவராத்திரி எப்படி ஏற்பட்டது என்பதற்கு பல கதைகள் வழக்கில் வழங்கி வருகின்றமை அனைவரும் அறிந்ததேயாகும். கதைகளை வைத்துக் கொண்டு சமயத்தையோ அல்லது அதன் தத்துவத்தையோ விமர்சிப்பதோ அல்லது கேலியாகப் பேசுவதோ ஏற்புடையதல்ல. இனிப்புத் தடவி அதனுள் மருந்தை வைத்துக் கொடுப்பது போலத்தான், புராணக் கதைகள் சமய உண்மைகளை எடுத்து உரைக்கின்றன என்பதுதான் உண்மை நிலையாகும்.

திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது எழுந்த ஆலகால வித்தை எம்பெருமான் ஏற்று – தானே உண்டாரென்பதும் பிரம்மாவும் விஷ்ணுவும் ஆணவத்தால் முரண்பட்டு யார் பெரியவர் என்று நின்ற நிலையில் எம்பெருமான் ஜோதிப் பிளம்பாகத் தோன்றினார் என்றும் அவர்கள் அந்த ஜோதியின் அடியையும் முடியையும் தேடியும் காணொணா நிலையில் எம் பெருமான் அவர்களுக்கு உண்மையை உணர்த்தினார் என்பதும், கண்ணப்பருக்கு எம்பெருமான் காட்சி கொடுத்தாரென்றும், பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனுக்கு பாசுபாஸ்திரம் கிடைக்கச் செய்தாரென்றும், யமனிடமிருந்து மார்க்கண்டேயரை எம்பெருமான் காத்த தினமென்றும், பல கதைகள் வழக்கில் இருந்து வருகின்றன என்பது நோக்கத்தக்கது. இவைதான் சிவராத்திரி என்றால் இதற்கு அப்பாலும் சிவராத்திரியின் சிறப்பு இருக்கிறது என்பதுதான் மிகவும் முக்கியமாகும். அதுதான் – மஹா சிவராத்திரி என்று மாசியில் ஏன் சிறப்பாக்கினார்கள் எங்கள் முன்னோர்கள் என்னும் அறிவியல் அணுகுமுறையாகும்.

நாங்கள் அனைவருமே பூமியிலேயே இருக்கிறோம். பிறப்பும், இறப்பும் யாவருக்கும் இந்தப் புவியிலே தான். உலகம் என்பது நாம் வாழுகின்ற இடம். இந்த உலகம் இயங்குவதற்கு ஒரு சக்தி கட்டாயம் தேவையானது தானே. அந்தச் சக்தியைத்தான் 'ஈத்தர ' என்று அறிவியல் சொல்லுகிறது. ஈத்தர் என்னும் சக்தி அண்டம் முழுவதுமே நிறைந்தே இருக்கிறது என்று அறிவியல் பகர்கிறது,

பூமி சூரியனை சிறிய நீள்வட்டப் பாதையிலும் பெரிய நீள்வட்டப் பதையிலுமாக இரண்டு பாதையில் சுற்றி வருகிறது என்பது வானியல் அறிவாகும். இவ்வாறு பூமி சுற்றி வரும்பொழுது பெரிய நீள்வட்டப் பாதையில் இருந்து சிறிய நீள்வட்டப் பாதைக்கு மாறுகின்ற நேரமாகத்தான் எங்களின் 'மஹாசிவராத்திரி' வரும் நேரம் அமைகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

ஈத்தர் சக்தி எப்பொழுதுமே பூமியை நோக்கி வந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் வரும் சிவராத்திரியில் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். ஆனால், வருடத்தில் ஒருமுறை வரும் மாசி மாத சிவராத்திரியில் மட்டுமே ஈத்தர் சக்தியின் அளவு அபரிமிதமாக இருக்கும். இப்படி அபரிமிதமாக இம் மாதத்தில் வருடத்துக்கு ஒருமுறை அமைவதால் இந்தக் காலத்து வருகின்ற சிவராத்திரியை 'மஹா சிவராத்திரி' என்று உயர்வுடன் போற்றும் நிலை ஏற்பட்டது என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமானதாகும்.

மாசிமாதத்தில் வருகின்ற ஈத்தருக்கு அதிக சக்தி காணப்படுகிறது. ஈத்தர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நகரும். பூமியானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சுற்றிக் கொண்டிருக்கும். எனவே நேரடியாக முழுச்சக்தியும் கிடைக்கும் நிலை இந்த மஹா சிவராத்திரிக்கே வாய்க்கிறது.

மஹா சிவராத்திரி அன்று விரதம் இருந்து கண் விழித்து முதுகை நேராக வைத்து தியானம் செய்யும் பொழுது ஈத்தர் உச்சந்தலையில் உள்ள சகஸ்ரார சக்கரத்தின் வழியாக பீனியல் கிளாண்ட் என்ற ஆனந்த சுரப்பி மூளையை அடைந்து பல வித நல்ல ஹார்மோன்களைச் சுரக்கச் செய்கிறது. இந்த நேரத்தில் நமக்கு நாமே ஆசீர்வாதம் (Self Blessing) செய்து கொள்ளும் பொழுது இது நமது டி.என்.ஏ. (DNA) ல் கெட்ட பதிவுகளை (கர்மா) அழிக்கும் வல்லமையை உருவாக்குகிறது.

ஈத்தர் சக்தி என்பது பகலிலும் உண்டு. இரவிலும் உண்டு. பகலில் சூரிய வெளிச்சம் காரணமாக சற்றுக் குறைவாகவே காணப்படும். ஆனால் இரவில் சூரிய வெளிச்சம் காணப்படாமையால் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். இரவு ஒன்பது மணி தொடக்கம் அதிகாலை இரண்டு மணிவரை உடலின் இயக்கமும் வித்தியாசமாய் இருக்கும். இவ்வேளை ஈத்தர் சக்தியின் அளவும் கூடுதலாகவே அமையும் நிலை காணப்படுவதால் இவ்வேளையிலே கட்டாயம் விழித்திருப்பது அவசியமாகிறது. எனவேதான் மகாசிவராத்திரியின் முக்கிய சாமமாக இந்த நேரம் எமது சமயரதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

ஆன்மீகத்துடன் அறிவியலைச் சித்தர்கள் இணைத்தே விட்டார்கள். சித்தர்களின் நோக்கில் சிவராத்திரி என்பது மிகவும் முக்கிய தினமேயாகும். அதுவும் மஹாசிவராத்திரி உடலையும், உள்ளத்தையும், நல்ல நிலையில் வைப்பதற்கு மிகவும் உகந்த தினம் என்பதே அவர்களின் தீர்க்கமான முடிவாகும். சித்தர்களின் சிந்தனை பலருக்கும் விளங்க மாட்டாது. ஆனால் அவர்கள் உண்மை நிலையையே உரைத்து நிற்பார்கள்.

பசித்திருத்தல் என்பதும் தத்துவார்த்தமானது. அதாவது இறையுணர்வைப் பெறுவதற்கு பசித்திருக்க வேண்டும். தனித்திருத்தல் என்பது தனிமையாக இருப்பதன்று. மனதை அலையவிடாமல் ஒரு நிலையில் வைத்திருப்பதாகும். விழித்திருத்தல் என்றால் நித்திரை செய்யாது இருப்பதல்ல. மனத்தை எங்குமே செல்ல விடாது இறை நினைப்பை நாடி விழித்திருக்கும் நிலையையே குறிப்பதாகும். இம்மூன்றையும் மகாசிவராத்திரின் முக்கிய நிலையாக நாம் அனைவரும் கொள்ளுதல் வேண்டும்.

விரதம் என்றாலே கட்டுப்பாடு என்றுதானே அர்த்தப்படும். கட்டுப்பாடு என்பது உடலுக்கு மட்டுமல்ல. உள்ளத்துக்குந்தான் என்பதை உணர்த்துவதே விரதத்தின் உயர் நிலையாகும். மஹாசிவராத்திரியில் உடல் கட்டுப்படுகிறது. உள்ளமும் கட்டுப்படுகிறது. எம்முள்ளே அபரிமிதமான ஒரு சக்தியும் உள்நுழைகிறது. அந்தச் சக்தியை உள்வாங்கும் பக்குவத்தை நாம்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**'தேடிக் கண்டு கொண்டேன் – திரு மாலொடு நான் முகனும்**
**தேடிக் தேடொணத் தேவனை யென்னுளே தேடிக் கண்டு கொண்டேன்'**

இதுதான் உண்மையான நிலையாகும். அந்தத் தேவனை நாங்கள் அனைவருமே காணலாம். அதற்காகத்தான் யாவரும் – பசித்து, தனித்து , விழித்து இருத்தல் அவசியமாகிறது.

சிவனே முழுமுதற் கடவுள். சிவனே அனைத்துக்கும் காரணமாய் இருக்கிறார். அவரின்றி ஓர் அணுவுமே அசையாது. ஆதியும் அவரே. அந்தமும் அவரே. இருளும் அவரே. அதையகற்றும் பேரொளியும் அவரே. அவரை முன்னிலைப்படுத்தும் பெருவிரதமாக எங்கள் சமய நெறி கைகாட்டி நிற்பதுதான் 'மஹாசிவராத்திரி' ஆகும். அந்தப் புனிதமான தினத்திலே 'தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி – அல்லல் அறுத்து ஆனந்தம்' தரும் வண்ணம், எல்லையில்லா அன்புடன் யாவரும் அந்தச் சிவப்பரம்பொருளை இறைஞ்சி நிற்போம்.

**இல்லக விளக்கது விருள்கெ டுப்பது**
**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே.**

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கிழக்கில் ஆசிரியர்களாக நியமிக்க உள்ளோம்!

## மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக தெரிவிப்பு



(காரைதீவு நிருபர் சகா)

கிழக்கில் ஆளணியின்படி சுமார் 24 ஆயிரம் ஆசிரியர்கள் தேவை. தற்போது 20 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். சுமார் 4 ஆயிரம் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. எனினும் அண்மையில் 3ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். கிழக்கு பாடசாலைகளில் பணியாற்றும் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களாக நியமிக்கவுள்ளோம்.

– இவ்வாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயக் கல்விப்பணிமனை நடத்திய நூல் வெளியீட்டுவிழாவில் பிரதமஅதிதியாகக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக கௌரவ அதிதியாக கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர். அங்கு செயலாளர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டுவிழா சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் தலைமையில் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கடந்த வியாழனன்று நடைபெற்றது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்கும் செயற்றிட்டத்தின்கீழ் இழந்த கல்வியை மீட்கும் கொவிட் 19 விடுமுறைக்கான செயற்றிட்டமாக சம்மாந்துறை கல்வி வலயம் தயாரித்த தரம் 11 இற்கான விஞ்ஞானம் மற்றும் கணித நூல்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தரம்4 இற்கான கணிதம், தமிழ்மொழி, சுற்றாடல்சார் செயற்பாடுகளடங்கிய நூல் ஆகிய மூன்று சுயகற்றல் நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. கூடவே இந்த ஆண்டுக்கான வலய வருடாந்த அமுலாக்கத்திட்ட கைந்நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வுகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

அங்கு கல்விச்செயலாளர் திசாநாயக்க மேலும் உரையாற்றுகையில் –

நீங்கள் அனைவரும் கல்விப்புலத்தில் செய்கின்ற சேவையைக் கடமையாகக் கருதமுடியாது. அது ஓர் உன்னதமான ஒரு சமூகசேவை ஆகும். ஒரு பாடசாலையைத் திறந்தால் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடிவிடலாம் என்பார்கள். சுகாதாரத்துக்கு அடுத்தபடியாக கல்விக்கு பில்லியன் கணக்கில் செலவு செய்கிறார்கள். நாம் நித்திரை செய்வதற்கு முன்னர் அன்றைய கடமையை ஒழுங்காகச்செய்தோமா? என்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். சுய கேள்வியை எழுப்ப வேண்டும்.

கல்விக்காகச் செலவழிக்கும் பில்லியனுக்கு கைம்மாறாக நாம் என்ன உற்பத்திசெய்திருக்கிறோம். துரதிஷ்டவசமாக கிழக்கு தொடர்ந்து 9 ஆவது இடத்தில் இருந்துவருகிறது. எமது பாரம்பரிய சிந்தனைகளை மனப்பாங்கை மாற்றவேண்டும். புதிதுபுதிதாகச் சிந்திக்கவேண்டும். கல்வியில் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவர அனைவரும் சிந்திக்கவேண்டும். திட்டங்கள் வகுத்து அதன்படி உழைக்கவேண்டும். பாடுபட வேண்டும். 'அனைவருக்கும் கல்வி' என்பது யுனிசெவ் தொடக்கம் பல நாடுகளுக்கும் பொதுவான வாசகமாகவுள்ளது.' சிறந்த எதிர்காலத்திற்கான கல்வி' என்பதே எனது வாசகம்.

எனது தாய் மாகாணமான கிழக்கு மாகாணம் இன்னும் 3 வருடங்களில் 5 ஆவது இடத்தை அடைய வேண்டும் என்பதே எனது இலக்கு. அதற்காக இரவில் நீண்ட நேரம் சிந்திக்கிறேன். நீங்கள் அனைவரும் சிந்தித்து ஒத்துழைக்கவேண்டும். தலைவர்கள் நீங்கள். மாணவர்களுக்கு உதவவேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். கிழக்கில் பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாதுள்ளனர். மேசன் தச்சு வேலை செய்கின்றனர். அப்படிஎனின் எங்கோ ஒரு தவறு நடந்திருக்கிறது. இல்லையா? அதனை ஆராயவேண்டும்.

### சம்பளப்பிரச்சினைக்கு ஆசிரியர்களுக்குத் தீர்வு

இலங்கையில் கடந்த 2 மாதங்களாகப் பயங்கர நெருக்கடிநிலை கல்வியில் இருந்தது. அதாவது சம்பள முரண்பாட்டை முற்றாக நீக்கவேண்டி இடம்பெற்ற தொடர் போராட்டமே அந்த நெருக்கடிநிலைக்குக் காரணம்.

தற்போது அரசாங்கத்தால் அது தீர்வுகாணப்பட்டு முடிவுக்குக்கொண்டுவரப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர்களுக்கு அது மகிழ்ச்சி சந்தோசம். அது கட்டாயம் செய்யப்படவேண்டும். நடந்துள்ளது. எனவே இனி எந்தக் காரணமும் சொல்லித் தப்பிக்கமுடியாது. எந்தவிதத்திலும் தப்புவதற்கான காரணம் சொல்லமுடியாது. நன்றாகப் படிப்பிக்கவேண்டும். நல்ல பெறுபேற்றை உற்பத்திசெய்யவேண்டும்.

ஆனால், இப்போது இன்னுமொரு சிறு வர்க்கத்தினர் தங்களுக்கு சம்பளம் போதாது.ஆசிரியர்களுக்குக் கூட எமக்குக்குறைய, எனவே எங்களுக்கும் சம்பளம்கூட்ட வேண்டும் என்று கோழமெழுப்பத் தொடங்கியுள்ளனர்.

ஒரு வலயக்கல்விப்பணிப்பாளர் என்னிடம் சிரேஷ்ட ஆசிரியரைவிட தனக்கு சம்பளம் குறைவாக உள்ளது எனக் கவலைப்பட்டார். கவலைப்படவேண்டாம் கடந்த 20 – 30 வருடங்களாக அவர்கள் குறைந்த சம்பளத்தில் தான் வாழ்ந்தவர்கள். இன்றுதான் சம்பள அதிகரிப்பை பெற்றுள்ளார்கள் என்று சொன்னேன்.

கல்விப்புலத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு இன்னும் தீர்வுகாணப்படவில்லை. ஏன் சரியான ஆராய்ச்சி இல்லை. எம்மிடையே ஆராய்ச்சியாளர்கள் உருவாகவில்லை. பிரச்சினைகள் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். இதனால் பிரச்சினைகள் பிரச்சினைகளாகவே தொடர்ந்துள்ளன. பிரச்சினைகளைத் தீர்க்க ஆராய்ச்சிகள் செய்ய இப்போது அரசாங்கமும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

### கிழக்கு கல்வி உயரும்

நீங்கள் அனைவரும் கல்வியியலாளர்கள். நான் கல்வியியலாளன் அல்லன். நிர்வாகசேவையைச் சேர்ந்தவன். நான் 2011 மார்ச் 23 ஆம் திகதி கிழக்கு மாகாணத்துக்கு வந்தவன். இதுவரை இங்குதான் பணியாற்றுகிறேன். 2017 இல் நான் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். ஆனால் எந்தவித நியாயமான காரணமுமில்லாமல் பதவியிலிருந்து 8 மாதங்களில் நீக்கப்பட்டேன். அதே தரப்பினர் இன்று மீண்டும் கிழக்கு கல்வியமைச்சுக்கு என்னைச் செயலாளராக நியமித்துள்ளனர்.

கிழக்கு மாகாண கல்வியை முன்னேற்றவேண்டும். தினமும் 9 மணிநேர வேலையின் பின்னர் நித்திரைக்குச் செல்லமுன் பலமணிநேரம் சிந்திக்கிறேன். மீண்டும் மீண்டும் அதிகமாகச் சிந்திக்கிறேன். எப்படி கிழக்குக் கல்வியை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்று. நீங்களும் சிந்தியுங்கள். ஏதாவது அகப்பட்டால் அதனைத் தெரிவியுங்கள். முன்மொழிவுகள் பரிந்துரைகள், ஆலோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். வரவேற்கப்படும். தயவுசெய்து ஒன்றுபடுங்கள். ஒத்துழையுங்கள். நிச்சயமாகக் கிழக்குக் கல்வியை உயர்த்த முடியும். – என்றார்.

தொடர்ச்சியாக நூல் அறிமுகவுரைகளை ஆசிரிய ஆலோசகர்களான எம்.எம்.ஜௌபர், ரி.எல்.றைஸ்டீன் ஏ.ஜி.எம்.கிஷோர் ஆகியோர் நிகழ்த்தினர். பின்னர் 3 நூல்களையும் பணிப்பாளர் நஜீம் அதிதிகளிடம் வழங்கி வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டன. பின்னர் அவை அதிபர்களிடம் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திசாநாயக மற்றும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் ஆகியோர் பொன்னாடை போர்க்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அதன்பின்னர் அவர்களது உரைகள் இடம்பெற்றன.

மாணவர்களின் மூவின கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கல்விஅபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.எல்.எ.மஜீட் நன்றியுரையாற்றினார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் தமிழ் தேசியவாதிகள் இல்லை!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் சுட்டிக்காட்டு

தமிழ்த் தேசியக் கட்சிகளோ, தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு திரியும் கட்சித் தலைவர்களோ, கட்சி அங்கத்தவர்களோ பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்துக்கு எதிரான கையெழுத்து போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்பது எமக்கு மிக பெரிய மனத்தாக்கத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி பொதுச்சந்தைக்கு முன்பாக இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து திரட்டும் நடவடிக்கைக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு –

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் இந்தப் போராட்டத்தில் பங்கேற்று கையெழுத்திட்டிருந்தார்.

பொதுமக்களுக்கு உள்ள அக்கறை இவர்களுக்கு இல்லை. இது நாட்டுக்கு தேவையான ஒன்று இந்தப் போராட்டத்தில் கட்சி பேதமின்றி அனைவரும் ஈடுபட வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தால் மக்களுக்கு ஏற்படும் ஆபத்தை உணர்ந்து அனைவரும் ஒன்று சேர்ந்து, கட்சிகளைக் கடந்து கையெழுத்திட வேண்டிய தேவை இருக்கின்றது.

கடந்த நல்லாட்சியில் இந்த விடயத்தைச் செய்யவில்லை என்று கேட்கலாம். ஆனால் நல்லாட்சியில் செய்யப்பட்ட முயற்சிகளை அவர்கள் மறந்திருக்கலாம். நல்லாட்சியில் இந்த முயற்சி எடுக்கவில்லை என்றால் இனியும் இந்த முயற்சி எடுக்கக்கூடாது என்று இருக்கின்றதா?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே அனைவரது கோரிக்கையாகவும் இருந்தால் – எங்களது மக்கள் மீது அக்கறை உள்ளவர்களாக அவர்கள் இருந்தால் – அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டும்.



சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள், முஸ்லிம் தலைவர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவத்தைத் தமிழ்த் தலைவர்களும் கொடுக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் இதன்போது கருத்துத் தெரிவித்துள்ளார்.

# மக்களை மிரட்டி வந்த கும்பல் எம்பிலிப்பிட்டியவில் கைதாகியது

எம்பில்பிட்டிய – கொலொனன பிரதேசத்தில் பல கிராமங்களில் அச்சுறுத்தலாக இருந்த கும்பலைக் கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதிகளில் மக்களை மிரட்டி, அச்சுறுத்தி கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் ஏனையவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கொலொன்ன – வாவல்பென, கும்புருகமுவ, ஹல்மில்ல மற்றும் கொடகும்புர பிரதேசங்களில் மக்களை அச்சுறுத்தி இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது.

வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை மிரட்டி பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்துவிட்டு ஒரு கட்டத்தில் பெண்களைத் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சிவராத்திரியின் மகிமைச் சிறப்பு!

உணவையும் உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாக அடங்கும், அப்போது இறையுணர்வுபெறமுடியும் நினைத்த காரியம் சித்தியாகும்.

இந்துக்களின் முழுமுதற்கடவுளாம் சிவபெருமானை நினைந்து வழிபடும் மிகவும் பிரதானமான முக்கிய விரதம் சிவராத்திரி விரதமாகும். மாசி மாதம் கிருஷ்ண பக்ஷ தேய்பிறை சதுர்த்தித் தினத்தில் மகா சிவராத்திரி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மஹா சிவராத்திரி மார்ச் முதலாம் திகதி (இன்று) கொண்டாடப்படுகிறது.

சிவலிங்கத்துக்கு அபிஷேக அலங்காரம், சிறப்பு பூஜை செய்ய முடியாவிட்டாலும், அருகில் உள்ள சிவன் ஆலயத்தில் அன்றைய தினம் நடக்கும் சிறப்புப் பூஜையில் கலந்து கொள்வது நல்லது.

மஹா சிவராத்திரி அன்று எப்படி விரதம் இருக்க வேண்டும். சிவனுக்கு என்னென்ன பொருள்களால் அபிஷேக அலங்காரம் செய்ய வேண்டும் என்பதை 'மகா சிவராத்திரி கற்பம்' என்ற சிறிய நூலில் விளக்கப்பட்டுள்ளது.

மனிதனுக்குத் தேவையான உணவு நல்ல தூக்கம், இந்த இரண்டையும் விலக்கி சிவனுக்காக நாம் விரதமிருப்பது தான் இந்த நாளின் நோக்கமாகும். உணவையும் உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாகவே அடங்கும். அப்போது இறையுணர்வு பெறமுடியும். நினைத்த காரியம் சித்தி ஆகும்.

ஆனாலும் அனைவராலும் விரதம் இருக்க முடியாது என்பது நிதர்சனம். குழந்தைகளும், பெரியவர்களும் அவர்கள் உடல் நிலையைப் பொறுத்து உணவு எடுத்துக் கொள்வது அவசியம் தான். சிவபெருமான் ஆரவாரத்தை விரும்பாதவர். ஏகாந்தம். முற்றிலும் அமைதி இவர் விரும்புவது அமைதி.

மஹா சிவராத்திரி அன்று சிவபுராணம், கோளறு பதிகம் லிங்காஷ்டகம், பஞ்சாட்சர ஸ்தோத்திரம், நடராஜப் பத்து, பரமசிவன் ஸ்தோத்திரங்களைப் படிக்கலாம். சிவராத்திரியன்று பஞ்சாட்ச மந்திரம் உச்சரிப்பதால் மற்ற நாள்களில் நூறு முறை பஞ்சாட்சரம் ஜெபித்த பலன் கிட்டும் என்கிறது சாஸ்திரம்.

ஆன்ம தரிசனம் தேடும் சிவ பித்தர்கள் மாலை 6 மணிக்குள் குளித்து விட்டு, உணவு முடித்து விட்டு கோவிலுக்குச் செல்லுங்கள். பணியில் உள்ளவர்கள் வேலையை முடித்து விட்டு குளித்து விட்டுக் கோவிலுக்குச் சென்று அமைதியாக ஓர் இடத்தில அமர்ந்து சிவ சிந்தனைகள் செய்தலே போதுமானது.

சிவராத்திரியன்று மனதில் சொல்லவேண்டிய மந்திரம் 'சிவாய நம ஓம் சிவாய வசி ஓம் சிவ சிவ சிவ ஓம்' சிவபெருமான் ஆலகால வித்தை உட்கொண்டதால் அவரோட உடல் மிகவும் வெப்பமாக மாறி விடுவதாக ஐதீகம். அந்த வெப்பத்தைத் தணிப்பதற்காகவே அவருக்குப் பல்வேறு வகையான பொருள்களைக் கொண்டு அபிஷேகம் செய்கிறோம்.

தேன், பால் ,தயிர், நெய் ஆகியவற்றால் அபிஷேகம் செய்வது எண்ணற்ற பலன்களைக் கொடுக்கக் கூடியது.

### மஹாசிவராத்திரியின் முக்கியத்துவம்

இந்து புராணங்களின்படி மஹாசிவராத்திரி அன்று சிவபெருமானுக்கும் பார்வதி மாதாவுக்கும் திருமணம் நடந்ததாக நம்பப்படுகிறது. மஹாசிவராத்திரியின் சிறப்பு சந்தர்ப்பத்தில் சிவபெருமானைக் கவர பக்தர்கள் விரதம் இருப்பார்கள். பார்வதி மாதாவைப் போல விரும்பிய வரன் கிடைக்க பெண்கள் அனைத்து சடங்குகளையும் பின்பற்றி விரதம் கடைப்பிடித்து பூஜை செய்கிறார்கள்.

### மகாசிவராத்திரி பூஜை நேரம்

இந்த ஆண்டு, மஹாசிவராத்திரிக்கு உகந்த நாள் மார்ச் முதலாம் திகதி இன்று செவ்வாய்கிழமை அதிகாலை 3.16 மணிக்குத் தொடங்குகிறது. சதுர்த்தசி திகதி மார்ச் 2 ஆம் திகதி நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு முடிவடைகிறது.



விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா
காரைதீவு

மஹாசிவராத்திரி பூஜை நான்கு கட்டங்களாக அனுசரிக்கப்படுகன்றன. நான்கு நிலைகளில் வழிபடுவதற்கான மங்களகரமான நேரம்:

* முதலாம் சாம பூஜை: மார்ச் முதலாம் திகதி மாலை 6.21 மணி முதல் இரவு 9.27 மணி வரை.
* இரண்டாம் சாம பூஜை: மார்ச் முதலாம் திகதி 9.27 முதல் நள்ளிரவு 12.33 வரை.
* மூன்றாம் சாம பூஜை: மார்ச் 2 ஆம் திகதி நள்ளிரவு 12:33 மணி முதல் 3.39 மணி வரை.
* நான்காம் சாம பூஜை: மார்ச் 2ஆம் திகதி காலை 3:39 முதல் 6:45 வரை.

இந்த நாளில் மக்கள் மஹாமிருத்யுஜ்ய மற்றும் சிவ மந்திரத்தை ஓதுவார்கள். சிவன் மந்திரம்: ஓம் நமசிவாய.

நாம் சிவராத்திரி தினத்தில் விரதமிருந்து சிவபெருமானை வழிபட்டால் நாம் செய்த பாவங்கள் நீங்கி நமக்கு முக்தி கிடைக்கும் என்பது ஐதீகம்.

### மஹா சிவராத்திரி வழிபாடு எப்போது தோன்றியது?

பிரளய காலத்தில் பிரம்மனும் அவரால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவன்களும் அழிந்து விட்டன. அந்த மோசமான இரவுப் பொழுதில் அன்னை உமாதேவி, சிவபெருமானை நினைத்து விரதமிருந்து பூஜித்து வந்தார்.

சிவனை நினைத்தாலே நம் வாழ்க்கை மாறும். அத்தோடு இரவில் நான்கு ஜாமங்களிலும் ஆகம விதிப்படி சிவனுக்கு உரிய அபிஷேக அலங்கார அர்ச்சனை செய்து வழிபட்டார். வழிபாட்டின் முடிவில் அம்பிகை சிவனை வணங்கி வேண்டிக் கொண்டார்.

தான் பூஜித்த இந்த இரவு 'சிவராத்திரி' என்று கொண்டாடப்பட வேண்டும். அப்படிப்பட்ட அற்புத நாளில் தேவர்களும் மனிதர்களும் சிவராத்திரி என்ற பெயரில் ஈசனை விரதமிருந்து வழிபடும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

வாழ்விலும் உலகிலும் உள்ள 'இருள் மற்றும் அறியாமையை வெல்வதை' நினைவூட்டும் வகையில் மஹா சிவராத்திரி அனுசரிக்கப்படுகிறது. பெரும்பாலான பண்டிகைகளைப் போலன்றி, இரவில் கொண்டாடப்படுகிறது மற்றும் ஒரு புனிதமான நிகழ்வாகும்.

இந்து புராணத்தின் படி, பிரம்மாவும் ,விஷ்ணுவும் யார் மிகவும் சக்தி வாய்ந்த கடவுள் என்று வாதிடுவதில் மும்முரமாக இருந்தனர். இதைக் கேட்ட சிவன் ஒரு பெரிய லிங்க வடிவில் காட்சியளித்தார். எரியும் நெருப்பின் முடிவை முதலில் கண்டுபிடிப்பவர் இந்துக் கடவுள்களில் பெரியவராகக் கருதப்படுவார் என்பது பிரம்மா மற்றும் விஷ்ணுவுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது.

விஷ்ணு பன்றி வடிவில் லிங்கத்தின் அடிப்பகுதியைத் தேடத் தொடங்கினார். பிரம்மா அன்னம் வடிவில் மேல் தேடத் தொடங்கினார். பல வருடங்களாக தேடியும் ஒரு முடிவு கிடைக்கவில்லை மேலும் இருவரும் சிவபெருமானை மிகவும் சக்திவாய்ந்தவராக ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

மலர்கள், தூபங்கள் மற்றும் பிற பிரசாதங்கள் செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் பக்தர்கள் நாள் முழுவதும் 'ஓம் நம சிவாய' என்ற புனிதமான பஞ்சாக்ஷர மந்திரத்தை உச்சரிக்கின்றனர்.

### வில்வ மரம்

வில்வ மரம் என்றும் அழைக்கப்படும் பெல் மரத்தை சிவபெருமான் விரும்புகிறார் என நம்பப்படுகிறது மேலும் அதன் இலைகள் மற்றும் பழங்கள் அவரது வழிபாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### மஹா சிவராத்திரியன்று செய்ய கூடாதவை

1.பக்தர்களுக்கு உணவு அளிப்பது

2.சிவ வழிபாட்டில் குங்குமம் அதிகம் பயன்படுத்தப்படுத்தக் கூடாது.

3.. சிவனுக்கு துளசி இலைகளை அர்ப்பணிக்கக் கூடாது. அப்படி அர்பணிக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம் சொல்லப்படுவதுண்டு. துளசியின் மணாளனான ஜலந்தர் எனும் அரக்கனை சிவபெருமான் வதைத்த காரணத்தால். சிவபெருமானைத் தன்னுடைய இலைகள் கொண்டு வழிபடக்கூடாது துளசி சபித்தாக புராணங்கள் கூறுகின்றன...

4. சங்கரரை வழிபடும்போது சங்கு ஊதக்கூடாது. தண்ணீரைப் பிரதிஷ்டை செய்யக்கூடாது.

5. உடைந்த அரிசியை சிவபெருமானுக்கு ஒரு போதும் பயன்படுத்தக் கூடாது. அதுபோல அரிசி நன்கு தூய்மையாகவும் இருக்க வேண்டும்.

சிவப்பு மலர்கள் கடவுளால் சபிக்கப்பட்டவை என்பது நம்பிக்கை. அதனால்தான் சிவபெருமானுக்கு சிவப்பு மலர்களை அர்ப்பணிக்கக்கூடாது...

சிவராத்திரியை முறைப்படி அனுஷ்டித்து வாழ்வில் உய்வோமாக!

# 'தமிழ் பேசும் மக்களின் இருப்பும் கேள்விக்குறி'!

## கலையரசன் எம்.பி. கூறுகிறார்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் எங்களது உயிர்ச்சேதம் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களது இருப்புக்களும் கேள்விக்குறியாகக் கூடிய சட்டமாகவே பார்க்கவேண்டி இருக்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேசத்தில் இருக்கின்ற சட்டத்துக்கு முரணானதும் மோசமானதுமான சட்டமாகவே இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இருந்து கொண்டு இருக்கிறது.

ஆரம்பத்தில் தமிழ் மக்கள் இந்தச் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் இன்று இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களும் பாதிக்கப்படும் நிலை உருவாகி இருக்கிறது.

இந்தச் சட்டத்தை இல்லாமல் செய்யவேண்டும் என்பதற்காகவே தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றது. இது வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல இதற்கு ஆதரவாக இலங்கையில் வாழும் அநேகர் எம்மோடு இணைந்து கைகோர்த்துள்ளனர்.

இந்தச் சட்டத்தை நீக்கவேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் இந்நாடு பெரும் அழிவை நோக்கிச் செல்லக்கூடும். அதனால் இந்நாட்டில் வாழும் அனைவரும் இந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.



பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி எம்மால் முன்னெடுக்கப்படுகின்ற இந்தப் போராட்டம் சர்வதேசம் வரை எம்மால் எடுத்துச்செல்லப்படும் அதே வேளை, இந்நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றோம். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# எரிபொருள்களின் நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வு என்கிறார் டக்ளஸ்!



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றங்கள் காரணமாக கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய கடற்றொழிலாளர் மகா சமேளனத்தின் பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நக்டா எனப்படும் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில் சார் பிரச்சினைகள் தொடர்பாக சமேளனத்தின் மாவட்டப் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டது.

குறிப்பாக கடற்றொழில் திணைக்களம் மற்றும் நக்டா ஆகியவற்றின் மாவட்டக் காரியாலயங்களில் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக தமது தேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று, எரிபொருள் நெருக்கடிகளால் கடற்றொழிலாளர்கள் தொழில் அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளையும் தங்கூசி வலை போன்ற தடை செய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாகவும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளால் தெளிவுபடுத்தப்பட்டது. அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், நன்னீர் மற்றும் பருவ கால நீர்நிலைகளை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் வரவு - செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையால், குறித்த நீர்நிலைகளில் அதிகளவு மீன் மற்றும் இறால் குஞ்சுகளை இம்முறை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அதனூடாக, தொடர்புபட்ட மக்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிகளால் கடற்றொழில் செயற்பாடுகள் பாதிப்படையக் கூடாது என்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனமாக இருக்கிறார் எனவும், இந்த நெருக்கடிகளில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குப் பரிகாரங்களை வழங்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து விரைவில் பரிகாரங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். அத்துடன் பொதுச் சபைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சம்பந்தப்பட்டவர்கள் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறும் முன்னுரிமை அடிப்படையில் அவை தீர்க்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்நிலையில், அண்மைய நாள்களாக இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோதச் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்த கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்படையினருக்கு நன்றி தெரிவிப்பதாகவும், இந்த விவகாரம் நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அதேபோன்று, கடற்றொழில் அமைச்சரின் முயற்சியால் வடக்கு மாகாணத்தில் பரந்தளவில் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றமையை சுட்டிக்காட்டிய கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் சிறப்பான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

## கோண்டாவிலிலிருந்து 108 கருங்கல் சிவலிங்கங்கள் கொக்கட்டிச்சோலையின் திருமந்திர அரண்மனைக்கு!








கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் சிவன் ஆலய வீதியில் சிவபூமி நிறுவனத்தினால் அமைக்கப்படும் திருமந்திர அரண்மனைக்கு கருங்கற்களால் உருவாக்கப்பட்ட 108 சிவலிங்கங்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், கோண்டாவில் சிவபூமி வளாகத்திலிருந்து ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டன்.

அச்சமயம் எடுக்கப்பட்ட படம் இவை. சிவபூமி ஸ்தாபகரும், தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் அப்பணிகளை நேரில் பார்வையிடுகின்றனர்.

## அரசிலிருந்துவெளியேற தயாராகின்றது சு.கட்சி!

### உறுதிப்படுத்தினார் தயாசிறி



தேவையான நேரம் வரும்போது கட்சி மத்திய குழுவின் அனுமதியுடன் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதே வேளை, மேற்படி நிகழ்வில் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் வர்த்தகர் குடுமேரி கொழும்பில் கைது

பாரியளவிலான போதைப்பொருள் வியாபாரி மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான தெமட்டகொட சமிந்தவின் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற பெண் ஒருவர் 20 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் குடுமேரி எனப்படும் மைக்கேல் எலிசபெத் மேரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 100 கிராம் 75 மில்லிகிராம் போதைப் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தெமட்டகொட லக்சிறி செவன வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடொன்றில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இதற்கு முன்னரும் பலதடவைகள் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 47 வயதான சந்தேக நபர் மாளிகாவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது. சந்தேக நபர் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வேறு தனிக் கடிதங்கள் தேவையில்லை என்று அந்தச் சந்திப்பில் எடுத்துரைக் கப்பட்டது. செல்வம், சித்தார்த்தன் எல் லோரும் தலை அசைத்து அதற்கு இணங்கினர். அத்தகைய நகல் கடிதம் செல்வம், சித்தார்த்தனுக்கு அனுப்பப் பட்டது. இரண்டு நாள்களுக்குப் பின்னர் பங்காளிக் கட்சித் தலைவர்களிடமிருந்து மேற்படி நகல் கடிதத்திற்கு ஏதும் மாற்றம், திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் வந்தனவா என்று கேட்டார் சம்பந்தன். இல்லை என்று பதிலளித்தார் சுமந்திரன். அதனை அடுத்து மூன்று கட்சிகளின் சார்பிலும் கூட்டமைப்புத் தலைவர் என்ற கோதாவில் கையொப்பமிட்டு அந்தக் கடி தத்தை ஜெனிவாவுக்கு அனுப்பி வைத் தார் சம்பந்தன்.

அதன் பின்னர் பெப்ரவரி நடுப்பகுதி யில் தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத் துக்கு ரெலோத் தலைவர் செல்வத்திடம் இருந்து ஒரு மின்னஞ்சல் வந்தது. ‘ஜெனிவாவுக்குக் கடிதம் அனுப்புவது தொடர்பில் தமிழ்க் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று நிகழ் நிலை முறையில் (இணையம் ஊடாக) நடக்கவிருக்கிறது. சுகவீனம் காரணமாக அக்கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா பங்குபற்ற முடியாமல் இருக்குமாயின், அவருக்குப் பதிலாக வேறு ஒருவரைத் தமிழரசு சார்பில் பங்குபற்ற ஒழுங்குபடுத் துங்கள்’ – என்று செல்வம் அக்கடிதத்தில் கோரியிருந்தார். தமிழரசு பதில் பொதுச் செயலாளர் அதற்குப் பதில் அளித்து இருந்தார். “அதுதான் ஜெனிவா அமர் வுக்கு கூட்டமைப்பு சார்பில் ஒரு பொது வான கடிதத்தை சம்பந்தன் ஐயா ஏற் கனவே அனுப்பி விட்டாரே. இனி ஒரு கடி தம் எதற்கு?’ – என்ற சாரப்பட அந்த மின் னஞ்சல் பதில் அமைந்தது. மேற்படி அந்த நிகழ் நிலைக் கூட்டத்திற்கு வேறு பிரதிநிதிகள் எவரையும் தமிழரசு பதில் பொதுச் செயலாளர் நியமிக்கவில்லை. ஆனால், சத்தம் சந்தடியின்றி, தமிழரசின் ஏனைய தலைவர்களுக்கு தெரியப்படுத் தாமல் தமிழரசு தலைவர் மாவை சேனா திராஜா மட்டும் அந்த இணையவழிக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தார். அந்த கலந்துரையாடலின் பெறுபேறா கத் தயாரிக்கப்பட்ட கடிதமே விக்னேஸ் வரன், செல்வம், சித்தார்த்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோ ரால் இப்போது 25ஆம் திகதி குறிப்பிட்டு, ஒப்பமிட்டு அனுப்பப்பட்டு இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ள்பெப்ரவரிநடுப்பகுதியிலேயே இலங்கை தொடர்பான தனது அவதானிப்பு அறிக் கையை இறுதி செய்து, இலங்கையின் பார்வைக்கும் அனுப்பிவிட்டார். நேற்று ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் கூட் டத்தொடர் ஆரம்பமாகும் சமயத்தில் அது பகிரங்கப் படுத்தப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளரின் அறிக்கை பெப்ரவரி நடுப்பகுதி யில் இறுதி செய்யப்பட்டு இலங்கைக்கும் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதில் சேர்ப் பதற்கான விடயங்கள் அடங்கிய தனது கடிதத்தை மேற்படி ஐந்து தமிழ் கட்சிகளும் பெப்ரவரி 25ஆம் திகதிக்கு பின்னர் இறுதி செய்து அனுப்பி இருக்கின்றன. ஆணையாளரின் அறிக்கையில் தமிழர் களைப் பற்றிய விடயங்களைச் சேர்க்கச் சொல்வது அல்ல அந்தத் தமிழ்க் கட்சிக ளின் நோக்கம், தமிழ் மக்களுக்கு, தாங் களும் அவர்களுக்காகக் குரல் கொடுக் கின்றார்கள் என்று பாசாங்கு – பம்மாத்து – காட்டுவதுதான் அவற்றின் நோக்கம். அதனால்தான் காலாவதியான விடயத் துக்கு, காலங்கடந்த கடிதத்தைச் சமர்ப் பித்து, அதனை ஊடகங்களுக்கும் அம் பலப்படுத்தி இருக்கின்றார்கள் – விடயம் விளங்காத தமிழர்களின் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்ற நப் பாசையில்.

சரி,வழமைபோல என்னிடம் ஒரே ஒரு கேள்விதான் உண்டு.

கூட்டமைப்பு என்று ஒன்றிருக்க, அதை விட்டுவிட்டு, ஜெனிவா போன்ற முக்கிய விடயங்களுக்கு விக்கியோடும், சுரேஷோடும், ஸ்ரீகாந்தாவோடும் சேர்ந்து ரெலோவும் புளொட்டும் கையெழுத்து இட லாம், நடவடிக்கை எடுக்கலாம் என்றால், தேர்தலில் வாக்குகேட்கவும் அவர்களுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து போட்டியி டலாமே, அதற்கு மட்டும் ஏன் தமிழரசுடன் கூட்டமைப்பு ‘லேபிளில்’ ஒட்டிக் கொண்டு வந்து வாக்கு கேட்க வேண்டும்?

தமிழரசை ஓரங்கட்டி, மற்றவை அனைத்தையும் ஒன்றிணைத்து, மாகாணசபையில் இறங்கவே துடியாய் துடிக்கிறது ரெலோ. அதற்குக் காரணம் – ஒரு சூத்திரம் – உண்டு அதனை நாளை பார்ப்போம்.

எது, எப்படி என்றாலும் சாகும்வரை கூட்டமைப்புத் தலைவர் என்ற பதவியைத் தக்க வைக்க வேண்டும் என்பதற்காக எது நடந்தாலும் தெரியாதவர் போல – சூடு, சொரணை அற்றவராக – சம்பந்தன் நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார். அது தமிழரின் தலையெழுத்து. யார் என்ன செய்ய முடியும்?

ஜெனிவாக் கடிதத்தில் கூட்டமைப்புத் தலைவராகத் தாம் கையொப்பமிட, அந்தக் கூட்டமைப்பில் இருக்கும் கட்சி கள் தம் பாட்டில் வேறு அணிகளுடன் சேர்ந்து கையெழுத்திட்டு வேறு கடிதத்தை ஜெனிவாவுக்கு அனுப்புவதை வெறு மனே பார்த்து இருப்பதைத் தவிர, அவ ரால் வேறு எதுவும் செய்ய முடியாது என் பதுதான் யதார்த்தம்.

– மின்னல் –

## ஆணையாளரின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடவுள்ளோம்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரி வித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியது. இந்நிலையில் ஆணை யாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை பற்றிய, ‘இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத் தினை ஊக்குவித்தல்’ எனும் தலைப்பி லான அறிக்கையின் முதற்பிரதி வெளி யாகியுள்ளது. இது தொடர்பில் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப் புக்கூறல், புதிய அரசமைப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசி யல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விபரீதம் உள்ளிட்ட தமிழர் நலன்சார் பல விடயங் களைச் சுட்டிக்காட்டி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளி யிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இது தொடர் பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நாம் அறிக்கையூடாக வெளியிடவுள்ளோம் – என்றார்.

## நீதிக்காகப் பேராடும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பு வத்திக்கான் நகரின் புனித பீட்டர் சதுக்கத்தில் நேற்று நடை பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் இலங்கையில் முன்னெடுக் கப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண் டகை, திருத்தந்தை பரிசுத்த பாப்பரசருக்கு இதன்போது தெளிவுபடுத்தினார் என்று அறியமுடிந்தது.

## தமிழரசு தவிர்ந்த...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

2022 பெப்ரவரி 25ஆம் திகதியிடப்பட்டு எழுதப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக் னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக் கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் ஈழ மக்கள் விடுத லைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியின் தலைவர் க. சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சி யின் தலைவர் ந.சிறிகாந்தா ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளருக்கான இந்தக் கடிதத்தில்,

இலங்கையில் நீடித்து வரும் நெறி முறை முரண்பாட்டிற்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காமையின் காரணமாகவே தமிழர்கள் மீண்டும் மீண்டும் படுகொலை செய்யப்பட்டு வருவது இனப்படு கொலைக்கு சமம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கும், அதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய அட்டூ ழியங்களை நிறுத்துவதற்கும் சர்வதேச அளவில் நடத்தப்பட்டு கண்காணிக்கப் படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு ஒன்றே ஒரே வழி என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

தமிழ் பிரதேசங்களில் அரச அனுச ரணையுடன் சிங்கள பௌத்த குடியேற் றங்களை நிறுத்துவதற்கும், சிங்கள – பௌத்த பிரதேசங்களை தமிழ் மாவட் டங்களுக்குள் இணைத்து பிரதேச எல் லைகளை நிர்ணயிப்பதை நிறுத்துவதற் கும், போர் முடிந்து பன்னிரண்டு ஆண்டு களுக்கு மேலாகிய நிலையில் தமிழர் பிரதேசங்களில் இலங்கை இராணுவத் தின் அபரிமிதமான பிரசன்னத்தை குறைப்பதற்கும் தீர்க்கமான நடவடிக்கைக ளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும், தமிழ் மக்களுக்கு எதிரான வன் கொடுமை குற்றங்களைத் தடுப்பதற்கு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள் கிறோம் –என்றுள்ளது.

## ஜேர்மனி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வுகளை இங்குள்ளவர்களுடன் இணைந்து மேற்கொள்வது தொடர்பாகவும் ஒரு நட்பு ரீதியான சந்திப்பு இடம்பெற்றது என யாழ். மாநகர மேயர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் இலங் கைக்கான ஜேர்மனியின் கலாசார நிறு வனப் பணிப்பாளருக்கு யாழ். மாநகர மேயரால் நினைவுப்பரிசு வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்வரும் காலத்தில் ஜேர்மன் மொழி, கலாசாரம் சார்ந்த நூல்களை யாழ்ப்பா ணம் பொதுசன நூலகத்துக்கு வழங்குவது தொடர்பாகவும் இதன்போது கலந்து ரையாடப்பட்டது.

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 295

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**742.ஆசிரியருக்கும், சிவகுமாரனுக்கும் உதவிகள் செய்ய முடிந்ததா?**

அந்தக் காலங்களில் குற்றவியல் வழக்குகளை நான் பாரமேற்று நடத்தவில்லை. முக்கியமாக சிவில் வழக்குகளிலே, கொழும்பில் தொழில் புரிந்தேன். இவற்றை விளங்கப்படுத்தி, யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும் சட்டத்தரணி ஒருவரை அமர்த்தி அவர் மூலம் வழக்கைக் கையாளலாம் என்றும் எனது சக சட்டத்தரணி ஒருவருடன் பேசி, அப்புக்காத்து ஒருவரை நியமிக்க வேண்டுமானால் அந்தத் தொகையை நானே தந்துதவலாம் என்றும் அபிப்பிராயம் சொன்னேன்.

தமிழ் உரிமைகளை ஒட்டியவற்றில் அப்போது ஆர்வம் இருந்ததே ஒழிய, நான் அவற்றில் நேரடியாக ஈடுபட்டிருக்கவில்லை. தந்தை செல்வா, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், தர்மலிங்கம், கதிரவேற்பிள்ளை போன்றோரின் அறிமுகம் இருந்தது. அவர்களில் கதிரவேற்பிள்ளையை கொழும்பில் அவரது தந்தையார், சகோதரர்கள் வீடுகளில் அடிக்கடி சந்தித்து அளவளாவுவது வழமை. அவருடன் பேசி, வழக்கை பற்றி ஒழுங்குகள் செய்வதாக வாக்களித்தேன். ஆசிரியருக்கு அவற்றில் நம்பிக்கை பிறக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் தொழில் புரிந்த சட்டத்தரணிகள் பலர், இப்படியான வழக்குகளில் ஈடுபட்டு, தமது தொழிலுக்குப் பொலிஸ் மூலம் வரக்கூடிய நல்லுறவு பாதிக்கப்படக் கூடும் என கருதுவதால், வழக்கு, முடியும் வரை அவர்கள் நம்பகமாக நின்று பிடிப்பார்களா என்ற சந்தேகத்தை தெரிவித்தார். தமிழரசு நாடாளுமன்ற அங்கத்தினர்களுடன் இருந்த அனுபவங்களில் அதிலும் ஈடுபட அவர் விரும்பவில்லை. ஆசிரியருக்கோ எல்லாவற்றுக்கும் மேலாக சிவகுமாரனை இலங்கிலாந்துக்கு அனுப்பி விட்டால் அதுதான் நல்லது என்ற எண்ணமும் ஆதங்கமும் மேலோங்கி நின்றன. ஆனால் அதற்கு சிவகுமாரன் சம்மதிக்கவில்லை. அந்த நிலையில் எனக்கு தோன்றிய வழி ஒன்றுதான். அந்தப் பேச்சையெடுத்தேன்.

அப்பொழுது வவுனியா சுந்தரலிங்கம் தனது தம்பியார் தியாகலிங்கத்துடன் உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவங்கள் சம்பந்தமாக ஊரில் நிற்பதைத் தெரிந்திருந்தேன். நான் அவரிடம் அழைத்து சென்று அறிமுகப்படுத்தி விடுகிறேன், அவரோ அன்றில் அவர் ஏற்படுத்தும் ஒருவர் மூலமோ வழக்கை கையாளலாம், பின் மற்றவை பற்றி பார்க்கலாம் என்று புத்திமதி தந்தேன். ஆசிரியருக்கும் சுந்தரலிங் கத்தின் அறிமுகம் இருந்தது. ஆனால் சிவகுமாரனுக்கோ அவரையொட்டி பெருத்த சங்கடம் ஒன்று இருந்தது . அவர் தமிழரசு கட்சியில் இல்லை; மற்றது சிவகுமாரனும் இளைஞர்களும் முன்னெடுத்து சமர்ப்பித்த யோசனைகள், சாதிபேதமற்ற ஆலயப் பிரவேசம் என்பவற்றில் சுதந்தரலிங்கம் சன்னதமாடிக் கொண்டிருந்தார். அந்த வருடத்துக்கான திருவிழாவிலே கூட சுந்தரலிங்கமும், தியாகலிங்கமும் அபிப்பிராய பேதங்கள் கொண்டிருந்தனர். அந்த திருவிழாவில் கூட பிரவேசங்களுக்கு சுந்தரலிங்கம் எதிர்ப்புச் செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

அவற்றைத் தொடரும் சமூக மாற்றங்களாக பார்த்து, சிவகுமாரன் தனது தேவை, அந்தரங்களின்நிமித்தம்வழக்கை சட்டத்தரணியாக அவரிடம் பாரப்படுத்தச் சொல்லி புத்திமதிகள் கண்டிப்புடன் ஆசிரியருக்கும் சிவகுமாரனுக்கும் நான் தர, அதனை அவர்கள் ஒத்துக் கொண்டு சுந்தரலிங்கத்தைச் சந்திக்கப் போனோம்.

**743.சுதந்தரலிங்கம் ஆதரவுகள் தந்தாரா?**

சுந்தரலிங்கத்தின் வரவேற்பு நெகிழ்ச்சியாக இருந்தது. அப்படிப்பட்ட, தமிழினத்தின் ஒருவனை – தன் ஊரவனை – பற்றித் தான் பெருமைப்படுகிறார் எனவும், தான் அவர் விடயத்தைக் கவனிப்பார் எனவும் ஒத்துக் கொண்டார். 'நீயும் உங்களைப் போன்றவர்களும் தாண்டா எங்களது எதிர்காலம்' என்று மனம் திறந்து வாயாறாப் பாராட்டினார். ஆசிரியரிடம், தொடர்ந்து அதனை அவருடன் ஈடுபட்டு நடத்த சொல்லி விட்டு, கொழும்புக்குத் திரும்பிவிட்டேன். சுதந்தரலிங்கம்தான் அந்த வழக்கை நடத்தினாரா அல்லது அவரது ஏற்பாடா என்பதை நான் தீவிரமாகப் பின் தொடரவில்லை. ஆனால் 1972இல் சிவகுமாரன் அந்த வழக்கிலிருந்து விடுதலையானர் என அறிந்து கொண்டேன்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழராய்ச்சி மாகாநாட்டுக்கு சிவகுமாரன் செய்த பணிகளும், அதில் நடந்த சம்பவங்களாலும், தமிழ் மக்களின் மரணங்களாலும் உணர்ச்சி மிகுந்தவனாக அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் அழிக்க பட வேண்டும் என சூளுரைத்தவனாகச் செயற்பட்டமையும் தெரிந்தவையே. அரச ஆதரவு எம்.பியாக இருந்த அருளம்பலத்தின் வீட்டிற்கும் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகராவுக்கும் கைக்குண்டுகள் வீசி, துப்பாக்கிச் சூடும் நடத்தியதால் தீவரமாக தேடப்பட்டவனாக, மறைந்து திரிந்தவனாக வாழவேண்டியருந்தது. எனக்கும் அதற்குப் பின் ஆசிரியரையோ, அவர் மகன் சிவகுமாரனையோ சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் எழவில்லை.

தமிழராய்ச்சி மகாநாட்டில் நடந்த சம்பவங்களால், தமிழ் மக்களும் கொதித்து போய், இளைஞர்கள் செய்பவற்றுக்கு நியாயங்கள் கற்பித்துக் கொண்டனர்.

ஒரு முறை உரும்பிராயில் இருந்தபோது, 700க்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு கூட்டப்பட்டு, ஊரை சல்லடை போட்டு தேடியமையைப் பார்த்தேன். ஆனால் சிவகுமாரன் ஊரில் இருக்க முட்டாளில்லை. நானும் ஆசிரியரைச் சந்திக்கவோ, பேசுவதற்கோ சந்தர்ப்பம் வரவில்லை.

700க்கு மேற்பட்ட பொலிஸார் உரும்பிராயில், சத்தியடியில், கோப்பாய் வீதியிலிருந்து பகுதிகளாக பிரித்து வீடுகளைச் சோதனையிட்டனர். 1974 இல் அது மிகப் பயங்கரமானதாகப் பார்க்கப்பட்டது. மக்கள், பொலிஸாரை வெறுத்தார்கள்.

அடுத்த முறை நான் ஊரில் இருந்த 5 ஜுன் 1974இல் நின்றபோதுதான் சிவகுமாரன் உயிரிழந்த சம்பவம் நடந்தது. கோப்பாய் வங்கியில் நடத்தவிருந்த கொள்ளை தோல்வியில் முடிய, சிவகுமாரனும் அவனது சகாக்களும் பல திக்குகளிலும் ஓட, காலில் மரவள்ளி மரக் கட்டை குத்தி இரத்தம் பலமாக சிந்தியதால் மேலும் ஓட முடியாது அவன் மாட்டுக் கொட்டில் அருகே ஒளிந்திருந்த போது பொலிஸார் அவனைக் கைது செய்ய முயன்றனர். அப்போது அவன் தன்னிடமிருந்த சயனைட்டை அருந்த அவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

ஊரில் விடயம் பரவியபோதே அனுதாப அலை எழுந்தது. ஊரவர்கள் பதகளித்தார்கள். ஊரவரில் எனக்கும் சிவகுமாரனுக்கும் அறிமுகமான சேகர் என்பவர் ஆஸ்பத்திரிக்குப் போய் ஏதும் உதவி செய்யலாமா என அபிப்பிராயப்பட்டார். நானும் அவரும் வந்து வண்டியில் அமர்ந்து கொண்டு ஆஸ்பத்திரி நோக்கிப் பிரயாணித்தோம்.

**744.ஆஸ்பத்திரியில் கண்டவை என்ன?**

நாங்கள் ஆஸ்பத்திரியை அடைந்த போது மக்கள் – முக்கியமாக இளைஞர்கள் – பள்ளிக்கூட மாணவர்கள் – சேரத் தொடங்கியிருந்தார்கள். வந்துகொண்டிருந்த சைக்கிள்களின் தொகையைப் பார்த்தபோது இளைஞர்கள் கூடலாம் என்று தெரிந்தது. பல வாசல்களிலும் பொலிஸார் குவிக்கப்பட்டு, அசம்பாவிதங்கள் ஏற்படலாம் எனக் காவலில் நின்றார்கள். அனேகமானவர்களுக்கு உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

நாங்கள் ஆஸ்பத்திரியின் பிரதான வாயிலை அணுகியபோது இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையுடன் சில பொலிஸ்காரர்களை எதிர்கொண்டேன். பொலிஸ் திணைக்களத்தில் வேலைக்குச் சேரும் முன்னர் பஸ்தியாம்பிள்ளை மக்கள் வங்கியில் வேலை பார்த்தவர். எனது நண்பர்கள் மூலம் வங்கியில் அவரை அறிந்து இருந்தேன். நான் கொழும்பிலிருந்து அந்த நேரம் அங்கு வந்தமை பஸ்தியாம்பிள்ளைக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் எனது பின்னணியில் அவருக்கு சந்தேகங்கள் எதுவும் இருந்ததில்லை. எனது மடியில் கூட அந்தக் காலங்களில் எந்தவித கனமும் இருக்கவில்லை. ஆனாலும் அவருக்கு எனது வரவை சிவகுமாரனோடு சம்பந்தப்படுத்தாமல் வேறு அறிந்த ஒருவரைப் பார்க்க வந்தேன் என்று சொல்லிவிட்டு, எந்த அலுப்பும் இல்லாமல் சிவகுமாரன் சிகிச்சையில் இருந்த வார்ட்டை நோக்கிப் போனோம். ஆஸ்பத்திரியில் இருந்த பரபரப்பில் அதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கவில்லை. ஆனால் போகும் வழிகளிலும் அவரது வார்ட்டில் கட்டிலைச் சுற்றியும் பலத்த காவல் இருந்தது. ஆசிரியரை அங்கு காணவில்லை. சிவகுமாரன் கட்டிலடியில் இருந்து அழுது கொண்டிருந்தவர்களை ஊகித்தேன். அது தாயாரும், சகோதரியும் எனக் கூறினர். இன்னும் இரண்டொரு இளைஞர்கள் சோக மயமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுடன் கதைத்தபோது சிவகுமாரன் தாக்குப் பிடிக்க மாட்டான் என்று தெரிந்தது. மேலதிகமாக எதுவும் செய்யலாமா, அவனைக் கவனிக்கும் வைத்தியர்கள் யார் என அறிவதற்குச் சென்றோம். அங்குதான் பின்னாளில் என்னோடு தமிழர் தகவல் நடுவத்திலும் ஆஸ்திரேலியாவிலும் இணைந்து பயணித்த வைத்தியர் சத்தியநாதனைச் சந்தித்தேன். தமிழிலும் தமிழர்களிலும் அதிக பக்தி கொண்டவராகத் தெரிந்தார். அவருடன் சில இளைஞர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் பதில்கள் தந்து பின்னர் எங்களோடு ஏற்பட்ட நட்பில் பேசினார். சயனைட் போதுமான அளவு உள்ளெடுத்து இருப்பதால் தப்புவது கஷ்டம், மேற்கொண்டு ஏதும் செய்வது பலன் தரப்போவதில்லை, இந்தப் பிள்ளைகள் அவரை வெளியில் எடுத்துத் தர உதவி கேட்கிறார்கள், அடுத்து வேறு எங்கும் உடனடி சிகிச்சைகள் செய்து, இந்தியாவுக்குக் கொண்டு போய்விட்டால் சிவகுமாரன் தப்பி விடுவான் என நினைக்கிறார்கள், ஆனால் அவ்வளவு நேரம் தாங்க முடியாது, மற்றது சிவகுமாரனும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும், தன்னை சாக விடுங்கள் என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றார்.

எல்லோரையும் ஆபத்தில் விட முடியாது, ஆனால் அது பிரயோசனமற்ற ஏற்பாடு என்பது அவர் எண்ணம். அந்த இளைஞர்களை நான் அறிந்திருக்கவில்லை. சேகருக்கு சில பேரைத் தெரிந்திருந்தது. அவர்கள் மூலம் சத்தியநாதனிடம் தாங்கள் சிவகுமாரனுடன் பேசிப் பார்க்கிறோம், அவன் சில நண்பர்கள் கேட்டால் இணங்குவான், ஆனால் சுற்றி பொலிஸ் காவலர் இருப்பதால் பேச முடியவில்லை, அவரைப் பொலிஸ் காவலைக் கொஞ்சம் அகற்றி, தாங்கள் அனுப்ப விரும்பும் சில நண்பர்களை அனுமதி தந்து, சிவகுமாருடன் பேச வைக்க உதவி கேட்டார்கள். சத்தியநாதன் எதுவும் செய்யச் சித்தமாயிருந்தார். மருத்துவர் என்ற ரீதியில், மற்ற மருத்துவர்களின் உதவிகளோடு தாங்கள் சிவகுமாரனை ஆஸ்பத்திரிக்குப் பொருள்கள் வரும் வாசலுக்கு கொண்டு வந்து, அங்குள்ள வாகனத்தில் ஏற்றிச் செல்ல வழி தரலாம், அங்கிருந்து கொண்டு போவது இளைஞர்களைப் பொறுத்தது, என்றாலும் எந்த முயற்சியானாலும் பிழைப்பது கஷ்டம் என்று புத்திமதி சொன்னார். சிகிச்சைக்காக என்று பொலிஸ் இல்லாமல் தனியறையில் வைக்கிறேன், அங்கு அவரது நண்பர்கள் வந்து பேசலாம் என்று ஒழுங்குகள் செய்து கொடுத்தார். சிவகுமாரனை தான் மரணத்தை எதிர் கொள்ள விரும்பிய அந்த நோக்கத்தைக் கைவிட வைக்க அவனது நண்பர்களால் கூட முடியவில்லை.

நாம் மேலும் சில நேரம் அங்கு இருந்துவிட்டு வெளியேறினோம். இளைஞர்கள் கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது.

ஆனால் சேகரும் நானும் எந்த ஆபத்தையும் கருத்தில் கொள்ளாது சிவகுமாரனை இளைஞர்களிடம் பொறுப்புக் கொடுக்கத் துணிவாகவும் தைரியமாக இருந்த சத்தியநாதன் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். அப்போது நடந்த பேச்சுகளில் சேகர் கூறிய சில விடயங்கள் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

(வளரும்)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஐ.நா. மாற்றியமைக்க வேண்டும்!



## கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

பயங்கரவாத தடுப்புச் சட்டம் இந்த நாட்டின் அரசமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். நாங்கள் மாத்திரமல்ல ஐரோப்பிய ஒன்றியம் ஏகமனதாக இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் "பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடு பூராகவும் முன்னெடுத்துவரும் கையெழுத்துப் போராட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பயங்கரவாத தடுப்புச் சட்டம் தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும். 1979 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே தற்காலிகமாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டாலும் விமர்சனம் கூட இருக்கின்றது.

1977 ஆம் ஆண்டுத் தேர்தலிலே தமிழீழத்துக்கான ஆணையைக் கேட்டு வென்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள்கூட இந்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை என்ற விமர்சனம் தற்போதும் இருந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் நாங்கள் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று போராடுவது இந்த நாட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இருக்கக் கூடாது. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டுக்கொண்டு வந்தார்கள்.

அந்தவகையில் எமது தலைவர்கள் அஹிம்சைப் போராட்டம் நடத்தி அடி உதை பட்டார்கள். எமது இளைஞர்கள் வீறுகொண்டு எழுந்த நேரம் அவர்களை அடக்கி ஒடுக்கலாம் என்ற நோக்கத்தில் கொண்வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டம் இன்றும் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றது.

ஒருகாலத்தில் தமிழ் மக்கள் மாத்திரம்தான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடந்த சில வருடங்களாகக் குறிப்பாக ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்பு பெரும்பாலான முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

எமது நாட்டில் எண்ணிக்கையின் அடிப்படையில் சிறுபான்மையினராக இருக்கும் எம்மை அடக்கி ஒடுக்கும் ஒரு சட்டமாகவே நான் இதனைப் பார்க்கின்றேன்.

அந்த வகையில் இந்தச் சட்டம் இந்த நாட்டின் அரசமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். நாங்கள் மாத்திரமல்ல ஐரோப்பிய ஒன்றியம் ஏகமனதாக இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

அதாவது இன்னொரு இனத்தை அடக்கி ஒடுக்கும் சட்டமாக இது இருக்கக்கூடாது. கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கின்றது என்றும் கூறலாம். ஏனென்றால் இலங்கைக்குக் கிடைக்கும் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை நாங்கள் மீள்பரிசீலணை செய்வோம் என்று கூறியிருக்கின்றார்கள்.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை இல்லாமல் போனால் இலங்கையின் பொருளாதாரம் மிகமோசமான நிலைக்குச் செல்லும் என்பது இந்த அரசுக்குத் தெரியும். அந்த வகையில் இந்த அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றியமைப்பதற்காக அதாவது சிறுசிறு மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எந்தவித காரணங்களும் கூறாமல் அகற்றப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் எனவும் இதன்போது கருத்து தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடு நாங்கள் அல்லவாம்!

## தினேஸ் குணவர்த்தன கூறுகிறார்

நாங்கள் எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடு அல்ல. அதனால் முடியுமானளவு நாங்கள் எரிபொருளை சிக்கனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நுகேகொடை மிரிஹான பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

நீண்டகாலமாக எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்ததால் பாரிய மின்சாரப் பிரச்சினைக்கு நாடு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலைக்கு மின் பொறியியலாளர்களே காரணமாவர். அத்துடன் எமக்குத் தேவையான மின் உற்பத்தியை நீர் மின் உற்பத்தி அல்லது வேறு முறைமைகளைக் கைவிட்டு டீசல் மூலமான மின் உற்பத்தி நடவடிக்கையை நீண்டகாலமாக மேற்கொண்டுவந்ததால் இன்று பாரிய மின் பிரச்சினைக்கு நாடு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் மின்சார சிக்கனம் மற்றும் சூரிய வெப்ப மின் உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் இதன்போது கருத்துத் தெரிவித்துள்ளார்.

# ஊடகவியலாளரை தாக்கிய நபரை பொலிஸார் கைது செய்யாதமை ஏன்?

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கேள்வி

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வந்தாறுமூலை பகுதியில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளரை தாக்கிய நபரை ஏறாவூர் பொலிஸார் இதுவரை கைது செய்யாதமை ஏன் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர்களின் பணிக்கும், சுதந்திரமான செயற்பாட்டுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், விசாரணைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

கடந்த காலங்களில் ஏறாவூர் பொலிஸார் சில ஊழல் அதிகாரிகளின் பொய்யான முறைப்பாடுகளை வைத்துக்கொண்டு ஊடகவியலாளர் ஒருவர் மீது பொய் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அதேபோல் கடந்த 26 ஆம் திகதி ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள வந்தாறுமூலை சந்தைப் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் பிரதீபன் மீது அரச ஆதரவு நபர் ஒருவர் பொதுமக்கள் முன்னிலையில் மிக மோசமாகத் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர் செங்கலடி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஊடகவியலாளர் தன்னைத் தாக்கியவர்கள் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திய நபரை ஏறாவூர் பொலிஸார் இது வரை கைது செய்யவில்லை.

ஊடகவியலாளரைத் தாக்கிய நபரை ஏறாவூர் பொலிஸார் இது வரை கைதுசெய்யாதமை ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு இல்லாத நிலை உருவாக்கப்பட்டு வருகிறது.

ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடும் நிலையில் ஊடகவியலாளர்கள் மிகுந்த அச்சத்துடனும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, ஊடகவியலாளரைத் தாக்கிய நபரை உடனடியாகக் கைது செய்து அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய தண்டனை பெற்றுக்கொடுக்க பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் அனைவரும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு போராட்டத்தில் ஈடுபடுவோம் என்பதை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடாகத் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருவேறு உலக சாதனைக்கான தெரிவுப் போட்டிகள் யாழில் நடந்தன





யாழில் இருவேறு உலக சாதனைக்கான போட்டி நிகழ்வுகள் யாழ்.உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றுள்ளன.

சிலம்பு சுற்றுதலில் உலக சாதனை நிலை நாட்டுவதற்கான தெரிவுப் போட்டி மற்றும் தனிநபர் புயப்போன்ற போட்டிகள் இடம்பெற்றுள்ளன.

தமிழர்களின் புராதன கலைகளில் ஒன்றான சிலம்பு சுற்றுதலில் கின்னஸ் சாதனை நிலைநாட்டும் முகமாக முதற்கட்டமாக உலக சாதனையை நிலைநாட்டும் தெரிவுப் போட்டி 8 நாடுகளை உள்ளடக்கி ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போட்டியின் விதிமுறையாக மூன்று மணித்தியாலங்கள் இடைவிடாது சிலம்பு சுற்றுவதோடு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு படிமுறைகளில் சிலம்பு சுற்றுதல் இடம்பெற்றது.

இலங்கையில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 14 போட்டியாளர்கள் பங்குபற்றினார்கள்.

தனிநபர் புயப் போட்டிக்காக இரண்டு மாணவர்கள் பங்குபற்றிய நிலையில் வவுனியாவைச் சேர்ந்த 8 வயது மாணவன் 4 நிமிடம் 30 வினாடிகளில் 390 புயப்புக்களை மேற்கொண்டுள்ளார். குறித்த போட்டி நிகழ்வுகள் யாவும் மெய்நிகர் வழியின் ஊடாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2022இல் வெளியிடப்பெற்றது.

# தமிழரசு அல்லாத ஐந்து கட்சிகளும் இணைந்து ஜெனிவாவுக்குக் கடிதம்

**நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரை ஒட்டி ஐ. நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ் தானிகர் மிசேல் பச்லெட் அம்மையாருக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஐந்து தமிழ்க் கட்சிகக் இணைந்து கடந்த 25 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.**

**தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி., தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்டின்) தலைவர் த.சித்தர்த்தன் எம்.பி., தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தலைவர் அ.அடைக்கலநாதன் எம்.பி., ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்) தலைவர் க.சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிக்காந்தா ஆகியோர் இக்கடி தத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.**

**கடிதத்தின் மொழிபெயர்ப்பு இங்கு பிரசுரமாகின்றது**

அன்புள்ள உயர்ஸ்தானிகர் அம்மையார்,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக எழுத்துமூலம் அறிவிப்பை வெளியிட நீங்கள் தயாராகி வரும் நிலையில், ஐ.நா. தீர்மானம் 46/1, மார்ச் 2021 இல் இயற்றப்பட்டதில் இருந்து தமிழர்களின் நிலை குறித்த மதிப்பீட்டை இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

ஜனவரி 12, 2021 அன்று பொறுப்புக்கூறலைக் குறிப்பிடும் உங்கள் கீழ்க்காணும் அறிக்கைக்கு நாங்கள் எங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறோம்:–

குற்றவியல் பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணம்வழங்குவதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கும் உறுப்பு நாடுகளுக்கு பல தெரிவுகள் உள்ளன. இலங்கையின் நிலைமையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக, இலங்கையில் அனைத்து தரப்பினரும் செய்த குற்றங்களுக்கு எதிராக உறுப்பு நாடுகள் சர்வதேச விசாரணை தீவிரமாக, வேற்று நாடுகள் அல்லது உலகளாவிய அதிகார வரம்பிற்கு உட்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப தங்கள் சொந்த தேசிய நீதிமன்றங்களுக்கு முன்பாக பாரப்படுத்த முடியும். உயர் ஸ்தானிகர் உறுப்பு நாடுகளை மனித உரிமை ஆணையரின் அலுவலகத்தோடு பணியாற்ற, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் பிரதிநிதிகள் உட்பட பொறுப்புக்கூறலுக்கான இவ்வாறான முறைமைகளை ஊக்குவிக்க, சாத்தியமான சர்வதேச குற்றங்கள் பற்றிய விசாரணைகள் ஆரம்பித்தல் மற்றும் இதில் முன்னேறுவதற்கான அர்ப்பணிப்பு திறனுக்கு ஆதரவு வழங்க ஊக்குவிக்கிறார். இந்த முயற்சிகள் உறுப்பு நாடுகள், நம்பத்தகுந்த பாரதூரமான மனித உரிமை மீறல்கள் அல்லது துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பான நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்றவர்களுக்கும் எதிரான சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் போன்ற இலக்குத் தடைகளையும் விண்ணப்பிக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நடைமுறை சாத்தியமான நன்மைகளை வழங்கவும் அத்துடன் அதற்கான முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குங்கள்.

https://undocs.org/A/HRC/46/20

பிப்ரவரி 18, 2021 அன்று 20 முன்னாள் உயர்மட்ட ஐ.நா அதிகாரிகளின் பகிரங்க கடிதத்தையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம். கையொப்பமிட்டவர்களில் நான்கு முன்னாள் ஐ.ந. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர்களும் அடங்குவர் – ஐ.நா.வின் நான்கு முன்னாள் உயர் அதிகாரிகள், இலங்கைக்கு விஜயம் செய்து அறிக்கைகளை எழுதியிருந்த ஒன்பது முன்னாள் சிறப்பு அறிக்கையாளர்கள், மேலும்,செயலாளர் நாயகத்தின் இலங்கை தொடர்பான நிபுணர்கள் குழுவின் மூன்று உறுப்பினர்களும் அடங்குவர்.

கையொப்பமிட்டவர்கள் குறிப்பிட்டது போல், இலங்கை தொடர்பாக சமீபத்தில் மனித உரிமைகள் ஐ.நா. உயர் ஸ்தானிகரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மீண்டும், நீதித்துறை மற்றும் பொறுப்புகூறலில் நாட்டின் முன்னேற்றம் இன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

பகுப்பாய்வின் அடிப்படையில் காணப்படும் போக்குகளின் நீடித்த தேடலின் மையக் கூறுகளின் படி இலங்கையில் அத்துமீறல்கள் மற்றும் அட்டூழியங்கள் மற்றும் உரிமை மீறல்கள் மற்றும் மோதல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பது வெகுஜன மனித உரிமைகளுக்கான நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான தீர்க்கமான சர்வதேச நடவடிக்கைக்கான கட்டாய தேவையை உருவாக்குகிறது. அவர்கள் முடிவில் அனைவரின் மனித உரிமைகளையும் அர்த்தமுள்ள முறையில் நிலைநிறுத்த இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான தயக்கமானது தீர்க்கமான, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதி செய்வதற்கான சர்வதேச நடவடிக்கை மட்டுமே இலங்கையின் வன்முறை சுழற்சிகளுக்கு இடையூறு விளைவிக்கும். என்று குறிப்பிட்டுள்ளனர்.

https://chrgi.org/wp - content/uploads/2021/02/Sowing - the-Seeds- of - Conflict.pdf

கடந்த ஆறு மாதங்களில், 2009 இல் முடிவடைந்த போரின் போது மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமல் தொடர்ந்து இருந்தது மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் புறக்கணித்தது. இதனால், நீதி ஸ்தம்பித்து, தண்டனையின்மை நீடித்தது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் சமூகத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பலர் இலங்கை அதிகாரிகளால் அதிகளவில் அச்சுறுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். இலங்கையின் சட்ட அமலாக்க அதிகாரிகளால் கொவிட் – 19 கட்டுப்பாடுகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களின் அதிகரித்த பயன்பாடு அமைதியான போராட்டங்களுக்கான சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துகிறது. அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படுவது தொடர்கிறது.

அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில், மக்கள் ஜனப்பரம்பல் கட்டமைப்பை மாற்றவும், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் பகுதிகளின் தொடர்பை சீர்குலைக்கவும், தமிழ் மக்களுக்கு அவர்களின் நிலங்கள் அணுகலை மறுக்கவும், அரசாங்கத்தால் இயக்கப்படும் சிங்கள – பௌத்த குடியிருப்புக்கள் (குடியேற்றங்கள்) பாரம்பரிய தமிழர் பகுதிகளில் வளர்ந்து வருகின்றன.. மகாவலி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம், வன திணைக்களம் மற்றும் வனவிலங்கு திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் இந்த முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏறக்குறைய சிங்கள – பௌத்த நபர்களை உள்ளடக்கிய இலங்கை இராணுவத்தின் பெருமளவிலான பிரசன்னத்தினால் இந்த அத்துமீறல் எளிதாக்கப்படுகிறது. தற்போதைய இனவாத அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களின் சனத்தொகை நிலையை சீர்குலைத்து, தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களுக்குள் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் குறியாக உள்ளது. சிங்கள – பௌத்தர்களைகொண்டபிரதேசங்களை தமிழ் மாவட்டங்களில் இணைத்து, அதன் மூலம் தமிழ் பிரதேசங்களில் சிங்கள – பௌத்த சனத்தொகையை அதிகரிக்கும் வகையில் பிரதேச எல்லைகளை வரையறுக்கும் வேலைத்திட்டத்தில் இலங்கை அரசாங்கமும் ஈடுபட்டு வருகின்றது என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்கள் தமது வாழ்வில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர். சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் (ITJP) பெப்ரவரி 2017 இல், தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாக அடைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவ கற்பழிப்பு முகாம்கள் பற்றிய விவரங்களை ஐ.நாவிடம் ஒப்படைத்தது. மேலும், ஏப்ரல் 2013 இல் இங்கிலாந்து வெளியுறவு மற்றும் காமன்வெல்த் அலுவலக அறிக்கையின்படி இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் போர் விதவைகள் உள்ளனர். குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு 2020 ஆம் ஆண்டில் உலகில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் இலங்கையில் இருந்து வருவதாகக் கூறியது. தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களம்(TID),குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (ஸீஹ்ணூம்) மற்றும் பிற அரசாங்க புலனாய்வு அமைப்புகளால் துன்புறுத்தப்படுகின்றனர் மற்றும் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த குடும்பங்களின் அமைதியான போராட்டங்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பல முறையீடுகள் மற்றும் தீர்மானங்கள் இருந்தபோதிலும், இலங்கை தொடர்ந்து கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை (PTA) பயன்படுத்துகிறது. பல தமிழ் அரசியல் கைதிகள் குற்றஞ்சாட்டப்படாமலோ அல்லது விசாரணையின்றி வருடக்கணக்காக சிறையில் அடைக்கப்பட்டும் அல்லது நியாயமற்ற விசாரணைகளின் பின்னர் தண்டனை பெற்ற போதும், இலங்கைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் கூட தமிழர்களுக்கு எதிரான அட்டூழியக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்படவில்லை அல்லது குற்றம் சாட்டப்படவில்லை. தற்போதைய அரசாங்கத்தினால் பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள் தங்களின் தண்டனை அல்லது குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நீடித்து வரும் நெறிமுறை முரண்பாட்டிற்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காமையின் காரணமாகவே தமிழர்கள் மீண்டும் மீண்டும் படுகொலை செய்யப்பட்டுவருவது இனப்படுகொலைக்கு சமம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இனப்பிரச் சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கும், அதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய அட் டூழியங்களை நிறுத்துவதற்கும் சர்வதேச அளவில் நடத்தப்பட்டு கண்காணிக்கப் படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு ஒன்றே ஒரே வழி என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் பிரதேசங்களில் அரச அனுசரணையுடன் சிங்கள பௌத்த குடியேற்றங்களை நிறுத்துவதற்கும், சிங்கள – பௌத்த பிரதேசங்களை தமிழ் மாவட்டங்களுக்குள் இணைத்து பிரதேச எல்லைகளை நிர்ணயிப்பதை நிறுத்துவதற்கும், போர் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையில் தமிழர் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தின்அபரிமிதமானபிரசன்னத்தை குறைப்பதற்கும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களை தடுப்பதற்கு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களின் அன்பான கவனத்திற்கும், பரிசீலனைக்கும் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும், இலங்கையின் தமிழ் மக்களுக்கு நீதியை உறுதி செய்வதற்கான உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் அயராத முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக இந்த உண்மைகளை நாங்கள் சமர்ப்பிக்கிறோம்.

---

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் முன்னணியின் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற, அத்துமீறல்கள் தொடர்பில் அறிக்கையிடுவதற்காக ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ஒருவரை நியமிப்பதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட வேண்டும் என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாகக் கூட கருத முடியாது எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மக்கள் பேரணியையும் கடிதத்தில் நினைவுகூர்ந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறுகின்ற காணி அபகரிப்பு, பயங்கரவாதத்தடுப்புச்சட்டத்தைநீக்கவேண்டியதன் அவசியம் உள்ளிட்ட மேலும் பல விடயங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

---

## ஓய்வுபெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றம் இதற்கான உத்தரவை நேற்றுப் பிறப்பித்தது.

---

## உக்ரைனின் இராணுவப்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உக்ரைன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்யப் படைகள் தாக்கி அழித்துள்ளன.

இதனால், உக்ரைன் படைகள் தங்களைத் தற்காத்துக்கொள்ள, ரஷ்யப் படைகளுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றன.

போரை முடிவுக்குக் கொண்டுவர பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. மேலும், ரஷ்யா மீது பல்வேறு நாடுகள் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடி கொடுத்து வருகின்றன.

இந்நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரானுடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று தொலைபேசியில் பேசினார். அப்போது, உக்ரைன் மீதான போரை ரஷ்யா நிறுத்த வேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அப்போது, உக்ரைனின் இராணுவப் பலத்தை முழுமையாக அழிப்பது மற்றும் கிரிமியா பகுதியை மேற்கு உலக நாடுகள் அங்கீகரிப்பதுமே போருக்கு முடிவுகட்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதியிடம் ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறினார்.

---

## ரஷ்யப் படைகள்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ரஷ்யா – உக்ரைன் போர் 5ஆவது நாளாக நேற்று நீடித்த நிலையில், ரஷ்யாவின் அழைப்பை ஏற்று நேற்று நேரடிப் பேச்சில் உக்ரைன் பங்கேற்றது.

முதலில் பேச்சுக்கு வர மறுத்த உக்ரைன், வேறு சில இடங்களைப் பரிந்துரைத்து இருந்த நிலையில், தனது முடிவில் இருந்து சற்றுப் பின் வாங்கி பேச்சுக்குச் சம்மதம் தெரிவித்தது.

இதன்படி, பெலாரசில் உள்ள கோமல் நகரில் ரஷ்யா – உக்ரைன் பிரதிநிதிகள் இடையே நேற்றுப் பிற்பகல் 3.50 மணிக்கு (இலங்கை நேரப்படி) பேச்சு தொடங்கியது.

இந்தப் பேச்சின்போது, ரஷ்யா உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் எனவும், ரஷ்யப் படைகள் முழுமையாக வெளியேற வேண்டும் எனவும் உக்ரைன் வலியுறுத்தியது.